بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 9

இதழ் 10

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1445 -ஷஃபான் 25 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1403 - அமான் 07 ★ 07 மார்ச் 2024

## அல்லாஹ்வின் கட்டளை

وَاِنۡ اَحَدٌ مِّنَ الۡمُشۡرِکِیۡنَ اسۡتَجَارَکَ فَاَجِرۡہُ حَتّٰی یَسۡمَعَ کَلٰمَ اللّٰہِ ثُمَّ اَبۡلِغۡہُ مَاۡمَنَہٗ ؕ ذٰلِکَ بِاَنَّہُمۡ قَوۡمٌ لَّا یَعۡلَمُوۡنَ ۟﴿۶﴾

**பொருள்**

இணை வைப்பாளர்களுள் எவராவது உம்மிடம் அடைக்கலம் கோரினால் அவர் அல்லாஹ்வின் வசனத்தைக் கேட்கும் வரை நீர் அவருக்கு அடைக்கலம் வழங்குவீராக. பின்னர் அவரை அவருடைய பாதுகாப்பான இடத்தில் சேர்த்து விடுங்கள். ஏனெனில், அவர்கள் (உண்மையினை) அறியாதவர்களாக இருக்கின்றனர்.

(அத் தவ்பா: 06)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## அறிவுரை செய்பவரின் அந்தஸ்து என்பது ஓர் உயர்தரமான அந்தஸ்து ஆகும். மேலும் ஒருவகையில் அந்த அந்தஸ்து நபித்துவ மகிமையை தன்னகத்தே கொண்டுள்ளது. நிபந்தனை என்னவென்றால் இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

உண்மையான மற்றும் மதிநுட்பமான விஷயங்களை தகுதியற்றவர்கள் மற்றும் தீய மக்களால் செவியேற்க முடியாது. இறைஞானம் மற்றும் மதி நுட்பத்திற்குரிய விஷயம் அவர்களுக்கு முன்னால் எப்போது வைக்கப்பட்டாலும் அவர்கள் அதன் பக்கம் கவனம் செலுத்துவதில்லை. இன்னும் கூறுவதாயின் பொறுப்பற்ற முறையில் அதனை தட்டிக் கழித்து விடுகின்றனர்.

உண்மையை பேசக் கூடிய மக்களும் குறைவாகவே இருக்கின்றனர் என்பதிலும் ஐயமில்லை. அல்லாஹ்விற்காக ஒருவரிடத்தில் உண்மையை பேசக் கூடிய மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. ஒருவகையில் (அத்தகையவர்கள்) இல்லை என்றே கூறலாம். பொதுவாக போதகர்கள் அறிவுரை செய்கின்றனர். ஆனால், மக்களிடம் இருந்து கொஞ்சம் வசூல் செய்ய வேண்டும் ; மேலும் உலகை ஈட்ட வேண்டும் என்பதே அவர்களின் அசல் நோக்கம் மற்றும் குறிக்கோளாக இருக்கின்றது. பெரும்பாலான மக்கள் நன்மையை ஏவுவதையும், தீமையை தடுப்பதையும் வருமானத்திற்கான வழிமுறையாக ஆக்கி கொண்டு விட்டனர். எனினும், அனைவரும் அத்தகையவர் இல்லை. தூய உள்ளம் படைத்த மனிதரும் இருக்கின்றனர். அவர்கள் இறைவன் மற்றும் அவனுடைய தூதரின் கூற்றுகளை மக்கள் வரை கொண்டு சேர்க்கின்றனர். ஏனெனில், அவர்கள் நன்மையை ஏவுவதற்கும், தீமையை தடுப்பதற்கும் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளனர். மேலும் அதனை அவர்கள் கடமையாக கருதுகின்றனர். மேலும், இதன் மூலம் நாம் அல்லாஹ்வின் திருப்தியை பெற வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர்.

அறிவுரை செய்பவரின் அந்தஸ்து என்பது ஓர் உயர்தரமான அந்தஸ்து ஆகும். மேலும் ஒருவகையில் அந்த அந்தஸ்து நபித்துவ மகிமையை தன்னகத்தே கொண்டுள்ளது. நிபந்தனை என்னவென்றால் இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும். அறிவுரை செய்பவர் தன்னிடத்தில் ஒரு சிறப்பு வகையான சீர்திருத்தத்தை செய்வதற்கு வாய்ப்பை பெற்றுக் கொண்டு விடுகின்றார் ஏனெனில் அறிவுரை செய்பவருக்கு குறைந்த பட்சம் தமது செயலாலும் அந்த விஷயங்களை மக்களுக்கு முன்னால் காட்டுவது அவசியமாக இருக்கின்றது.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 505, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

## ஷைத்தான் என்பதற்கு அரபி மொழியின் அடிப்படையில் உண்மையிலிருந்து விலகக் கூடிய நபர் அல்லது தீமையில் முன்னேறக் கூடியவர் என்பதாகும். மேலும் நிராசையடைபவருக்கு இப்லீஸ் என்று கூறப்படும்

وَمِنَ النَّاسِ مَنۡ یُّجَادِلُ فِی اللّٰہِ بِغَیۡرِ عِلۡمٍ وَّیَتَّبِعُ کُلَّ شَیۡطٰنٍ مَّرِیۡدٍ ۙ﴿۴﴾

کُتِبَ عَلَیۡہِ اَنَّہٗ مَنۡ تَوَلَّاہُ فَاَنَّہٗ یُضِلُّہٗ وَیَہۡدِیۡہِ اِلٰی عَذَابِ السَّعِیۡرِ ﴿۵﴾

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல்ஹஜ்ஜின் வசனம் 4 மற்றும் 5-ற்கு விளக்கவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

அல்லாஹ் கூறுகின்றான். தெளிவான சான்றுகளின்றி எந்தவொரு விவகாரத்திலும் தர்க்கம் செய்யக் கூடாது. அவ்வாறிருக்க ஒருவர் இறைவன் தொடர்பாக வீண் தர்க்கம் செய்யத் துவங்கி விடுவதும், ஒரு வரம்பு மீறிய ஷைத்தானை பின் தொடர்ந்து நடப்பதும் எவ்வளவு அநீதியாகும். உள்ளபடியே இது இறை நியதியாகும். அதாவது எந்த நபர் ஷைத்தானைப் பின்தொடர்ந்து நடப்பாரோ மேலும், அவனது நண்பனாகி விடுவாரோ அவரை அவன் வழிகெடுத்து விடுகின்றான். மேலும் அந்த நபருக்கு அவன் தண்டனைக்கான வழியையே காட்டிக் கொடுக்கின்றான். ஒருவர் மீண்டும், மீண்டும் ஷைத்தானின் கூற்றுகளை ஒப்புக் கொள்கின்றபோது, பின்னர் அவர்கள் இருவருக்குமிடையில் நட்புரீதியிலான தொடர்பு ஏற்பட்டு விடுகின்றது. மேலும் இந்தத் தொடர்பு இறுதியில் அவரை நரகம் வரை கொண்டு சேர்க்கின்றது. மற்றோர் இடத்தில் இறைவன் கூறுகின்றான்: எவருடைய நண்பனாக ஷைத்தான் ஆகிவிடுகின்றானோ அவர் நினைவிற் கொள்ளட்டும்; ஷைத்தான் மிகவும் தீய நண்பன் ஆவான். மனிதன் இந்த நிலையிலும் தனது சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்தாவிட்டால் பின்னர் தீமைகளில் முன்னேற்றம் அடைந்து, அடைந்து இறுதியில் ஷைத்தான் அவரது நண்பனாக மட்டும் இருப்பதில்லை. மாறாக அவரது எஜமானன் ஆகிவிடுகின்றான். மேலும் அவர் ஷைத்தானின் அடிமைத்துவத்தில் முற்றிலும் பிணைக்கப்பட்டு விடுகின்றார். நம்பிக்கையாளரோ நேர்வழியில் செல்கின்றார். ஆனால் இந்த நபரோ எந்த அளவிற்கு கீழே விழுந்து விடுகின்றார் என்றால் ஷைத்தான் அவரது முதுகில் சவாரி செய்து விடுகின்றான். (தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம் 10 -15, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

## நபிமொழி

**சிறந்த நற்செயல்கள்**

(2518) ஹஸ்ரத் அபூதர் (கஃப்பாரீ (ரலி)) அவர்களிடம் இருந்து அறிவிக்கின்றார்கள்: எந்த செயல் சிறந்த செயல் ஆகும்? என்று நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டேன். அன்னார் (ஸல்) கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வதும், அவனது வழியில் ஜிஹாது செய்வதும் ஆகும்.

அடிமைகளில் எந்த அடிமையை விடுதலை செய்வது சிறந்ததாகும்? என்று நான் கேட்டேன். அதற்கு, அன்னார் (ஸல்) கூறினார்கள்: எவர் விலையில் (மற்ற) அனைவரையும் விட உயர்ந்தவராக இருக்கின்றாரோ மேலும் எவர் முதலாளிகளுக்கு மிகவும் நேசத்திற்குரியவராக இருக்கின்றாரோ அவரை (விடுதலை செய்வது ஆகும்). என்னால் இதனை செய்ய இயலாவிட்டால் (என்ன செய்வது?) என்று நான் கேட்டேன். அன்னார் (ஸல்) கூறினார்கள்: பின்னர் ஆதரவற்ற ஒருவருக்கு உதவி செய்து அவரை பயனுள்ளவராக ஆக்குங்கள் அல்லது சம்பாதிக்க முடியாத, தொழில் தெரியாத ஒருவருக்கு உதவி செய்யுங்கள்.

இதனையும் என்னால் செய்ய முடியவில்லை என்றால் பின்னர் நான் என்ன செய்வது ?என்று அன்னார் கேட்டார்கள். அதற்கு, அன்னார் (ஸல்) கூறினார்கள்: அப்படியென்றால் பின்னர் மக்களுக்கு தீங்கிழைப்பதிலிருந்து விலகியிருங்கள். ஏனெனில், இது உமது நஃப்ஸிற்கு நீர் செய்கின்ற தருமமாக இருக்கும்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, கிதாபுல் அதிக், காதியான் பதிப்பு 2008-ம் ஆண்டு)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**உஹது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் &**
**வானவர்களின் இறங்குதல் &**
**ஸஹாபா பெருமக்களின் உயிர் தியாகங்கள் போன்றவை தொடர்பான ஈமானை வலுவூட்டக் கூடிய நற்குறிப்புகள்**

அன்னார் (ஸல்) காயமடைந்து இரத்தம் வழிந்தோடிக் கொண்டிருந்தபோதும் அல்லாஹ்வின் கருணையோடு ஒத்திருந்த அன்னாரின் கருணையானது மிகைத்திருந்தது. பின்னர், இந்த துஆவை செய்தார்கள்:
அல்லாஹ்வின் நபியின் மீது மக்கள் அநீதியிழைக்கின்றபோதும், அவரது நேசத்திற்குரியவர்கள் மீது அநீதியிழைக்கின்றபோதும் அல்லாஹ்வின் கோபம் அதிகரிக்கின்றது. ஆனால், அல்லாஹ்வே! இந்த மக்கள் அறியாமை மற்றும் மடமையின் காரணமாக அநீதியிழைக்கின்றனர். இந்த மக்களை நீ மன்னித்து விடுவாயாக! இவர்களின் தவறுகளின் காரணமாக இவர்கள் மீது நீ தண்டனையை இறக்காமல் இருப்பாயாக! اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ

இது எத்தகைய பரிவு மற்றும் கருணை வெளிப்பாடு ஆகும் !

---

உஹது போரில் பங்கு பெற்ற வானவர்களின் தலைகளிலும் அடையாளமாக சிகப்பு நிற தலைப் பாகைகள் இருந்தன. சிகப்பு நிறத்தில் சிறிது துக்கத்திற்கான தூதுச் செய்தியும் இருந்தது. அந்த நாளன்று அனஸ் பின் நஸ்ரை இந்த நிலையில் கண்டோம். அதாவது, அன்னாரின் உடலின் மீது எழுபது காயங்களுக்கான அடையாளங்கள் இருந்தன.
இன்றைய நாட்களில் ஏமன் நாட்டு அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அதேபோன்று முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களிடம் ஒற்றுமையை உருவாக்குவானாக

---

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 26 ஜனவரி 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **ஸுல்ஹ்** மாதம் **26ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு போரில் ஏற்பட்ட காயங்களைக் குறித்த அறிவிப்புகளில் இவ்வாறு சில விவரங்கள் வருகின்றன: ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் அறிவிப்பிற்கு ஏற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

اِشْتَدَّ غَضَبُ اللّٰهِ عَلٰى مَنْ قَتَلَهُ النَّبِيُّ فِيْ سَبِيْلِ اللّٰهِ
اِشْتَدَّ غَضَبُ اللّٰهِ عَلٰى قَوْمٍ دَمَّوْا وَجْهَ نَبِيِّ اللّٰهِ

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அல்லாஹ்வின் வழியில் எவனை கொலை செய்தார்களோ அவன் மீது அல்லாஹ்வின் கோபமானது கடுமையாகின்றது. மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தை இரத்தம் சிந்த வைத்த சமுதாயத்தின் மீதும் அல்லாஹ்வின் கோபம் கடுமையாகின்றது.

தப்ரானியின் அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காயமுற்றபோது கூறினார்கள்:

اِشْتَدَّ غَضَبُ اللّٰهِ عَلٰى قَوْمٍ
كَلَمُوْا وَجْهَ رَسُوْلِ اللّٰهِ

எந்த சமுதாயம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத்தை காயப்படுத்தியதோ அந்த சமுதாயத்தின் மீது அல்லாஹ்வின் கோபம் மிகக் கடுமையாக இருக்கின்றது. பின்னர், சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு கூறினார்கள்:

اَللّٰهُمَّ اغْفِرْ لِقَوْمِيْ فَاِنَّهُمْ لَا يَعْلَمُوْنَ

பொருள்: அல்லாஹ்வே! எனது சமுதாயத்தை மன்னித்து விடுவாயாக! ஏனெனில், அவர்கள் அறிவற்றவர்களாக இருக்கின்றனர். ஸஹீஹைன் அறிவிப்பிலும் இவ்வாறே உள்ளது: அதாவது, அன்னார் (ஸல்)

اَللّٰهُمَّ اغْفِرْ لِقَوْمِيْ فَاِنَّهُمْ لَا يَعْلَمُوْنَ

என்று மீண்டும், மீண்டும் கூறிக் கொண்டிருந்தார்கள். பொருள்: அல்லாஹ்வே! எனது சமுதாயத்தை மன்னித்து விடுவாயாக! ஏனெனில், அவர்கள் அறிவற்றவர்களாக இருக்கின்றனர்.

ஆக, அன்னார் (ஸல்) காயமடைந்து இரத்தம் வழிந்தோடிக் கொண்டிருந்தபோதும் அல்லாஹ்வின் கருணையோடு ஒத்திருந்த அன்னாரின் கருணையானது மிகைத்திருந்தது. பின்னர், இந்த துஆவை செய்தார்கள்:

அல்லாஹ்வின் நபியின் மீது மக்கள் அநீதியிழைக்கின்றபோதும், அவரது நேசத்திற்குரியவர்கள் மீது அநீதியிழைக்கின்றபோதும் அல்லாஹ்வின் கோபம் அதிகரிக்கின்றது. ஆனால், அல்லாஹ்வே! இந்த மக்கள் அறியாமை மற்றும் மடமையின் காரணமாக அநீதியிழைக்கின்றனர். இந்த மக்களை நீ மன்னித்து விடுவாயாக! இவர்களின் தவறுகளின் காரணமாக இவர்கள் மீது நீ தண்டனையை இறக்காமல் இருப்பாயாக!

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ

எப்படிப்பட்ட கருணை மற்றும் பரிவின் வெளிப்பாடு! ஸஹீஹ் புகாரியில் இந்த அறிவிப்பு இவ்வாறு வருகின்றது:

قَالَ عَبْدُ اللّٰهِ: كَاَنِّيْ اَنْظُرُ اِلَى النَّبِيِّ،
يَحْكِيْ نَبِيًّا مِنَ الْاَنْبِيَاءِ

ضَرَبَهٗ قَوْمُهٗ فَاَدْمَوْهُ
وَهُوَ يَمْسَحُ الدَّمَ عَنْ وَجْهِهٖ
وَيَقُوْلُ: اَللّٰهُمَّ اغْفِرْ لِقَوْمِيْ
فَاِنَّهُمْ لَا يَعْلَمُوْنَ

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இப்போதும் காண்கின்றேன். அன்னார் (ஸல்) நபிமார்களில் ஒரு நபியின் நிலையை எடுத்துக் கூறிக் கொண்டிருந்தார்கள். அவரை அந்த சமுதாயம் அடித்து அடித்து இரத்தம் சிந்தச் செய்தது. மேலும், அவரோ தமது முகத்தில் இருந்து இரத்தத்தை துடைத்துக் கொண்டிருந்தார். மேலும், அல்லாஹ்வே! எனது சமுதாயத்தை மன்னித்து விடுவாயாக! ஏனெனில், அவர்களோ அறியாதவர்களாக உள்ளனர் என்று கூறிக் கொண்டிருந்தார்.

இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களும் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் எனும் நூலில் விரிவாக எழுதியுள்ளார்கள்: அது என்னவென்றால், குன்றை சென்றடைந்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் உதவியுடன் தமது காயத்தைக் கழுவினார்கள். மேலும், அன்னாரது கன்னத்தில் பதிந்திருந்த அந்த இரும்புத் துண்டுகளை ஹஸ்ரத் அபூ உபைதில்லாஹ் பின் ஜராஹ் (ரலி) அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு தமது பற்களால் வெளியே இழுத்தார்கள். எந்த அளவுக்கு என்றால், இந்த முயற்சியில் அன்னாரது இரண்டு பற்களும் உடைந்துபோய் விட்டன. அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்களின் காயத்திலிருந்து இரத்தம் வழிந்தோடிக் கொண்டிருந்தது.

மேலும் அந்த இரத்தத்தைப் பார்த்து, அன்னார் (ஸல்)

كَيْفَ يُفْلِحُ قَوْمٌ خَضَبُوْا وَجْهَ نَبِيِّهِمْ بِالدَّمِ
وَهُوَ يَدْعُوْهُمْ اِلٰى رَبِّهِمْ

என்று கூறிக் கொண்டிருந்தார்கள். பொருள்: அவர் இறைவனின் பக்கம் அழைக்கின்றார் என்பதற்காக தனது நபியின் முகத்தை

இரத்தமாக்கிய சமுதாயம் எவ்வாறு வெற்றி பெறும்? இதன் பிறகு சிறிது அமைதியாக இருந்தார்கள். பிறகு, மீண்டும் கூறினார்கள்:

اَللّٰهُمَّ اغْفِرْ لِقَوْمِىْ فَاِنَّهُمْ لَا يَعْلَمُوْنَ

அதாவது, அல்லாஹ்வே! எனது சமுதாயத்தை மன்னித்து விடுவாயாக! ஏனெனில், அவர்களோ அறியாமை மற்றும் மடமையின் காரணமாக இந்த தவறை செய்துள்ளனர். அறிவிப்பில் வருகின்றது: இந்த சந்தர்ப்பத்தில்தான் இந்த திருக்குர்ஆன் வசனமும் இறங்கியது. لَيْسَ لَكَ مِنَ الْاَمْرِ شَيْءٌ

அதாவது, தண்டனை வழங்குவதோ மன்னிப்பதோ அல்லாஹ்வின் கரத்தில் உள்ளது. அதில் உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. இறைவன் யாரை விரும்புகின்றானோ மன்னிக்கின்றான். எவருக்கு தண்டனை கொடுக்க விரும்புகின்றானோ தண்டனை கொடுக்கின்றான். பிறகு, எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் ஃபாத்திமத்துஸ் ஸுஃஹ்ரா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களைக் குறித்த அபாயகரமான செய்தியை கேட்டு மதீனாவை விட்டு புறப்பட்டார்கள். சிறிது நேரத்திற்கு பிறகு உஹது மைதானத்தை சென்றடைந்தார்கள். சென்றடைந்ததுமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காயங்களை கழுவத் தொடங்கினார்கள். ஆனால், இரத்தமானது நிற்கவேயில்லை. இறுதியில் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் சாக்கின் ஒரு பகுதியை எரித்து அதன் சாம்பலை அந்தப் பகுதியில் வைத்துக் கட்டி ஒத்தடம் கொடுத்தபோது அந்த இரத்தம் நின்றது. பிற பெண்களும் கூட அந்த சந்தர்ப்பத்தில் காயமுற்ற ஸஹாபிகளுக்கு தொண்டாற்றி நற்கூலியைப் பெற்றனர்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: அதாவது உஹது போர் சந்தர்ப்பத்தில் ஒரு கல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தலைக் கவசத்தின் மீது வந்து விழுந்தது. அதன் ஆணியானது அன்னாரது தலையில் நுழைந்து விட்டது. அதனால் அக்கம் பக்கத்தில் போரிட்டு ஷஹீதாகியிருந்த ஸஹாபிகளின் சடலங்களின் மீது அன்னார் (ஸல்) மயக்கமடைந்து விழுந்தார்கள். அதற்கு பிறகு, இன்னும் பிற ஸஹாபிகளின் உடல்கள் அன்னாரின் தூய உடலின் மீது விழுந்தன. மக்கள் அன்னார் (ஸல்) கொல்லப்பட்டு விட்டதாகக் கருதினார்கள். ஆனால் அன்னாரை குழியில் இருந்து வெளியே எடுத்தபோது அன்னாருக்கு நினைவு திரும்பியது. அப்போது, எதிரி தன்னை காயப்படுத்தினான் என்று எண்ணவேயில்லை. தனது பற்களை எதிரிகள் உடைத்து விட்டனர்; மேலும் தனது உறவினர்களை, நண்பர்களை, நெருக்கமானவர்களை எதிரி ஷஹீதாக்கி விட்டான் என்றும் அன்னார் (ஸல்) கருதவேயில்லை. மாறாக, நினைவு திரும்பியதுமே

رَبِّ اغْفِرْ لِقَوْمِىْ فَاِنَّهُمْ لَا يَعْلَمُوْنَ

என்று கூறினார்கள்:

பொருள்: என் இறைவா! இந்த மக்கள் என்னுடைய அந்தஸ்தை அறியவில்லை. எனவே நீ! இவர்களை மன்னித்துவிடுவாயாக! மேலும் இவர்களின் பாவங்களை மன்னித்து விடுவாயாக என்று துஆ செய்தார்கள்.

உஹது போரின் போது வானவர்கள் வந்தது மற்றும் அவர்கள் போர் புரிந்தது தொடர்பாகவும் குறிப்புகள் கிடைக்கின்றன. ஹஸ்ரத் ஸஃது பின் வகாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் உஹது நாளன்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வலப் பக்கமும், இடப் பக்கமும் இரு நபர்களைக் கண்டேன். அவர்கள் மீது வெள்ளை நிற ஆடை இருந்தது. அவர்கள் மிகவும் கடுமையாக சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். நான் இதுவரை இதற்கு முன்னர் அவர்களை கண்டதில்லை. அதற்கு பிறகு அவர்களை பார்க்கவில்லை. அதாவது, அவர்கள் ஜிப்ராயீல் (அலை) மற்றும் மீகாயில் (அலை) ஆகியோர் ஆவர்.

இதனை பைஹகீ அவர்கள் அறிவித்துள்ளார்கள். பிறகு முஜாஹித் அறிவித்துள்ளார். கூறுகின்றார்கள்: வானவர்கள் பத்ர் நாளன்று மட்டும் போர் புரிந்தார்கள். பைஹ்கீ கூறுகின்றார்கள். அவர்களின் கருத்து என்னவென்றால், முஸ்லிம்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படாதபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் வழங்கப்பட்ட கட்டளையின் மீது பொறுமை காக்காததனால் அப்போது வானவர்கள் சண்டையிடவில்லை.

இங்கு இவர் சுட்டிக் காட்டுவது குன்றின் மேல் இருந்த முஸ்லிம்களை ; அதாவது, அவர்கள் கட்டுப்படுதலின் முன்மாதிரியை வெளிப்படுத்தி பொறுமை காத்தபோது, வானவர்கள் பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்கள் பொறுமையின்மையை வெளிப்படுத்தியபோது வானவர்கள் தங்களது நிழல்களை அகற்றிக் கொண்டனர். அல்லாஹ்வே நன்கறிவான்!

இது தொடர்பாக முஹம்மது பின் உமைர் அவர்கள் தமது ஆசிரியரிடமிருந்து

بَلٰۤى اِنْ تَصْبِرُوْا وَ تَتَّقُوْا

என்ற அல்லாஹ்வின் கூற்று தொடர்பாக அறிவிக்கின்றார்கள்; அதாவது அவர்கள் பொறுமை செய்யாமல் ஓடியபோது அவர்களுக்கு உதவி செய்யப்படவில்லை. மேலும், இவர்களிடமிருந்து இந்த அறிவிப்பும் செய்யப்பட்டுள்ளது: அதாவது அன்னாருடைய ஆசிரியர் கூறினார்: முஸ்அப் பின் உமர் அவர்கள் ஷஹீதானபோது, முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களின் தோற்றத்தில் ஒரு வானவர் கொடியைப் பிடித்தார். அந்த நாளன்று வானவர்கள் கலந்து கொண்டனர். ஆனால், அவர்கள் போர் புரியவில்லை.

ஹாரிஸ் பின் ஸிம்மஃ அவர்கள் அந்த நிலைமைகளை படம் பிடித்தவாறு கூறுகின்றார்கள்: உஹது நாளன்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் பள்ளத்தாக்கில் இருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னிடம் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி)அவர்கள் தொடர்பாக வினவியபோது, நான் அவர்களை மலையின் பக்கம் கண்டேன் என்று கூறினேன். அதற்கு, நிச்சயமாக வானவர்கள் அன்னாருடன் இணைந்து போர் புரிந்து கொண்டிருக்கின்றார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹாரிஸ் கூறுகின்றார்கள்: பிறகு, நான் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களை நோக்கி திரும்பியபோது, அன்னாருக்கு முன் ஏழு நிராகரிப்பாளர்கள் மரணித்துக் கிடப்பதை நான் கண்டேன். உங்களது வலது கை வெற்றி அடைந்து விட்டது என்று நான் அவர்களிடம் கூறினேன். பின்னர், இவர்கள் அனைவரையும் நீங்களா கொன்றீர்கள்? எனக் கேட்டேன். அதற்கு, இவரையும், இவரையும் நான் கொன்றேன்; மேலும் மற்ற நபர்களையெல்லாம் எப்படிப்பட்ட ஒரு நபர் கொன்றார் என்றால் அவரை நான்(முன்னர்) கண்டதில்லை என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அப்போது நான் கூறினேன்: அல்லாஹ்வும் அவனது தூதரும் நம்மிடம் உண்மையே கூறியுள்ளார்கள். அதாவது, வானவர்கள் அன்னாருடன் இணைந்து போரிடுகின்றனர் என்று கூறிய விஷயம் உண்மையே ஆகும்.

இப்னு ஸஃது அவர்கள் அப்துல்லாஹ் பின் ஃபஸல் பின் அப்பாஸ் அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: அன்னார் கூறுகின்றார்கள்: உஹது நாளன்று முஸ்அப் பின் உமைர் அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொடியை வழங்கினார்கள். அன்னார் (ரலி) ஷஹீதாகியதும் ஒரு வானவர் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களின் தோற்றத்தில் கொடியைப் பிடித்தார்கள். அப்போது, முஸ்அபே! முன்னேறிச் செல்வீராக! என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு, நான் முஸ்அப் அல்ல என்று அந்த வானவர் அன்னாரை நோக்கி கூறினார். அப்போது, இவர் வானவர் ஆவார்; இவர் மூலம் அவருக்கு உதவி செய்யப்பட்டுள்ளது என்பதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அடையாளம் கண்டு கொண்டார்கள். முஹம்மது பின் ஸாபித் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நீங்கள் முன்னேறிச் செல்லுங்கள் என்று உஹது நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு, அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களே! முஸ்அப் ஷஹீதாகவில்லையா? என்று ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, சரிதான்! ஒரு வானவர் அவருடைய பிரதிநிதியாக இருக்கின்றார்: அவருடைய பெயர் இந்த வானவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அல்லாமா பின் அஸாகர் அவர்கள் ஸஃது பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: அன்னார் கூறுகின்றார்கள்: உஹது நாளன்று நானே கண்டது என்னவென்றால், நான் அம்பை எய்துகின்றேன்; எனது அம்பை வெள்ளை நிற ஆடை அணிந்திருந்த அழகிய மனிதர் அந்த அம்புகளை எடுத்துக் கொண்டு எனக்கு அருகில் திரும்ப வந்து கொண்டிருந்தார். நான் அவரை அறிந்திருக்கவில்லை. எதுவரை என்றால் அதற்கு பிறகு நான் அவர் வானவராக இருந்திருப்பார் என்பதை அறிந்தேன்.

உமைர் பின் இஸ்ஹாக் அவர்களிடமிருந்து கிடைக்கின்ற அறிவிப்பு என்னவென்றால், மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து




தொலைவில் சென்று விட்டனர். மேலும், ஸஃது அன்னாருக்கு முன் அம்பை எய்து கொண்டிருந்தார்கள். ஓர் இளைஞர் அன்னாருக்கு அம்புகளை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். அன்னார் அம்புகளை எய்தபோதெல்லாம் அவர் அம்புகளை எடுத்து வந்து கொடுத்துக் கொண்டிருந்தார்.ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அபூ இஸ்ஹாகே! நீர் உமது அம்புகளை எய்துவீராக! போர் முடிந்த பிறகு அந்த இளைஞரை எங்குமே காணவில்லை. அவரைக் குறித்து எவருக்கும் தெரியவில்லை.

அல்லாமா பைஹக்கீ உர்வாவிடமிருந்து அல்லாஹ்வின் கூற்றான

وَلَقَدْ صَدَقَكُمُ اللّٰهُ وَعْدَهٗ

என்பது தொடர்பாக அறிவிக்கின்றார்கள்: பொறுமை மற்றும் இறையச்சத்தை பேணி நடக்கும்பட்சத்தில் ஐந்தாயிரம் வானவர்கள் மூலமாக உதவி செய்யப்படும் என்று அல்லாஹ் அவர்களிடம் வாக்குறுதி வழங்கியிருந்தான். மேலும், அல்லாஹ் அவ்வாறு செய்தான். ஆனால் அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் கட்டளைக்கு மாறு செய்து வரிசைகளை விட்டு விட்டு, தமது இடத்தை விட்டு அசையக் கூடாது என்ற ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளையை அம்பு எய்தும் வீரர்கள் கைவிட்டபோது உலகத்திற்கான எண்ணம் கொண்டபோது அவர்களிடமிருந்து வானவர்களின் உதவி எடுக்கப்பட்டது. மேலும் அப்போது அல்லாஹ்

وَلَقَدْ صَدَقَكُمُ اللّٰهُ وَعْدَهٗۤ اِذْ تَحُسُّوْنَهُمْ بِاِذْنِهٖ

என்ற இந்த வசனத்தை இறக்கினான். அதாவது அல்லாஹ் நிச்சயமாக தனது வாக்குறுதியை உங்களிடம் உண்மைப்படுத்திக் காட்டினான். நீங்கள் அவனது கட்டளையை பின்பற்றியபோது தனது வாக்குறுதியை உண்மைப்படுத்திக் காட்டினான். மேலும், அவர்களுக்கு வெற்றியை வழங்கினான். ஆனால் அவர்கள் கட்டளைக்கு மாறு செய்தபோது அவர்களை சோதனையில் ஆழ்த்தினான்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களும் தமது ஒரு குத்பாவில் இந்த சம்பவத்தை எடுத்துரைக்கின்றார்கள்: அதாவது, ஸஹாபா அறிவிக்கின்றார்கள்: பத்ர் போரில் காணப்பட்ட வானவர்களின் தலைகளில் கருப்பு நிற தலைப்பாகைகள் இருந்தன. மேலும், அவர்களுக்கு ஒரு சீருடை இருந்தது. ஸஹாபிகள் அந்த வானவர்களை பல்வேறு நிலைகளில் கண்டபோது அதேபோன்று கருப்பு நிற சீருடையை அவர்கள் அணிந்திருந்தனர். நடைமுறைகள் ஒன்றுபோல் இருந்தபோது அவர்கள் வியப்பில் ஆழ்ந்து விட்டனர். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸவ்விமீன் என்பதற்கு அதாவது கடுமையாக தாக்கக் கூடியவர்கள் என்ற அந்த சொல்லிற்கு விளக்கமளிந்திருந்தது போன்று அவ்வாறே விதிக்கப்பட்டிருந்தது.மேலும் அவ்வாறே நிகழ்ந்தது. இதேபோன்று உஹது போரில் பங்கு பெற்ற வானவர்களின் தலைகளிலும் அடையாளமாக சிகப்பு நிற தலைப் பாகைகள் இருந்தன. சிகப்பு நிறத்தில் சிறிது துக்கத்திற்கான தூதுச் செய்தியும் இருந்தது. ஏனெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட காயங்களின் காரணமாக ஸஹாபிகளுக்கு எப்படிப்பட்ட துக்கம் ஏற்பட்டதோ அதுபோன்ற துக்கம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழு வாழ்நாளிலும் ஒருபோதும் ஸஹாபிகளுக்கு வந்ததில்லை. ஒரு துக்க செய்திக்கு பிறகு மற்றொரு துக்க செய்தி அவர்களுக்கு கிடைத்தது. அவர்கள் துக்கத்தில் மிகவும் ஆழ்ந்து விட்டார்கள். ஆக, இந்தப் போரில் வானவர்களின் அடையாளத்திற்கு எத்தகைய நிறம் தேர்ந்தெடுக்கப்பட்டது என்றால் அதில் துக்கம் மற்றும் இரத்தத்தின் அம்சங்கள் அடங்கியிருந்தன. அதாவது சிகப்பு நிறம். ஸஹாபிகள் உறுதியான பாதங்களுடன் நிலை நின்றது மற்றும் அவர்களின் தியாகங்கள் தொடர்பாக ஏராளமான சம்பவங்கள் இருக்கின்றன. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பாதுகாப்பதில் தங்களது உயிர்களையும் தியாகம் செய்த சம்பவங்கள் ஏராளம் இருக்கின்றன. ஹஸ்ரத் அனஸ் பின் நஸ்ர் அன்ஸாரி ஸஹாபியைக் குறித்து குறிப்பு வருகின்றது. அனஸ் அவர்கள் அறிவித்தார்கள்: எனது தந்தையின் சகோதரர் ஹஸ்ரத் அனஸ் பின் நஸர் அவர்களுக்கு பத்ர் போரில் கலந்து கொள்வதற்கு இயலவில்லை. ஆக, அன்னார் (ரலி), ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் இணை வைப்பாளர்களுடன் செய்த முதல் போரில் என்னால் கலந்து கொள்ள இயலவில்லை. அல்லாஹ் இணை வைப்பாளர்களுடனான போரில் என்னை கலந்து கொள்ளச் செய்தால் பின்னர் நான் செய்வதை நிச்சயமாக அல்லாஹ்வும் கண்டு கொள்வான். உஹது நாளன்று முஸ்லிம்கள் போர் மைதானத்தில் இருந்து விலகியபோது, அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வே! அவர்கள் செய்ததற்காக நான் உன்னிடம் மன்னிப்பு வேண்டுகின்றேன்.

போர்க் களத்தில் இங்கும் அங்கும் சிதறுண்டு போன முஸ்லிம் நண்பர்களைப் பற்றி அன்னார் கூறினார்கள். கூறினார்கள்: அவர்கள் செய்ததிலிருந்து நான் தவிர்ந்து கொண்டவன்; குற்றமற்றவன் என்பதை நான் வெளிப்படுத்துகின்றேன். அதாவது அவர்கள் இணை வைப்பாளர்களைப் பற்றி குறிப்பிடுகின்றார்கள். பிறகு அன்னார் முன்னேறினார்கள். ஹஸ்ரத் ஸஃது பின் முஆஸ் (ரலி) அவர்களுடன் சந்திப்பு நிகழ்ந்தது. அன்னார் (ரலி) கூறினார்கள்: ஸஃது பின் முஆஸே! சுவர்க்கம். நஸ்ரின் இறைவன் மீது ஆணையாக! நான் உஹதின் பக்கத்தில் இருந்து அதன் நறுமணத்தை நுகர்கின்றேன். அதற்கு ஸஃது அவர்கள் கூறினார்கள்: பிறகு அவர்கள் செய்ததை என்னால் செய்ய முடியவில்லை. அதாவது இந்த சம்பவத்தை அன்னார் (ரலி) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எடுத்துக் கூறிக் கொண்டிருந்தார்கள். அன்னார் (ரலி) கூறினார்கள்: எவ்வாறு அவர்கள் எவ்வித அச்சமுமின்றி போர் புரிந்து கொண்டிருந்தார்களோ அவ்வாறு என்னால் போர் புரிய முடியவில்லை. ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் அன்னாரின் மீது 80-க்கும் அதிகமான வாளால் ஏற்பட்ட காயங்கள் இருந்ததைக் கண்டோம்; அல்லது ஈட்டியால் குத்தப்பட்ட காயங்கள் இருந்ததைக் கண்டோம். அன்னார் (ரலி) ஷஹீதாகி இருந்தார்கள். இணை வைப்பாளர்கள் அன்னாரின் உடலை சிதைத்து இருந்தார்கள். அன்னாரின் உடலை எவராலும் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. ஆனால், அன்னாரின் சகோதரி அடையாளம் கண்டார்கள். ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களின் விரலில் இருந்த அடையாளத்தை வைத்து அடையாளம் கண்டார்கள். ஹஸ்ரத் அனஸ் (ரலி) கூறினார்கள்:

مِنَ الْمُؤْمِنِيْنَ رِجَالٌ صَدَقُوْا مَا عَاهَدُوا اللّٰهَ عَلَيْهِ

நம்பிக்கையாளர்களில் சிலர் எத்தகையவர்கள் என்றால் அவர்கள் தாங்கள் அல்லாஹ்விடம் செய்த வாக்குறுதியை உண்மைப்படுத்திக் காட்டினார்கள். இந்த வசனமானது அன்னார் தொடர்பாக இறங்கியது; அல்லது அவர்களைப் போன்ற மற்றவர்களைக் குறித்து இறங்கியது என்று நாங்கள் கருதி வந்தோம்.

இப்னு இஸ்ஹாக் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களின் தந்தையின் சகோதரர் அனஸ் பின் நஸ்ர் அவர்கள் தல்ஹா பின் உபைதுல்லாஹ் மற்றும் உமர் பின் கத்தாப் போன்ற முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார் ஸஹாபிகளின் சில மக்களை கடந்து சென்றார்கள். அவர்கள் அமர்ந்திருந்தனர். அனஸ் (ரலி) அவர்கள் அந்த மக்களிடம் நீங்கள் ஏன் அமர்ந்துள்ளீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கொல்லப்பட்டு விட்டார்கள் என்று அவர்கள் கூறினர். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மரணித்த பிறகு நீங்கள் உயிருடன் இருந்து என்ன செய்ய போகின்றீர்கள்? எவ்வாறு அன்னார் (ஸல்) மரணித்தார்களோ அதேபோன்று நீங்கள் மரணித்து விடுங்கள் என்று ஹஸ்ரத் அனஸ்(ரலி) கூறினார்கள். பிறகு, அனஸ் (ரலி) அவர்கள் நிராகரிப்பாளர்களை நோக்கி சென்று எந்த அளவிற்கு போர் புரிந்தார்கள் என்றால் இறுதியில் அன்னார் (ரலி) ஷஹீதாகிவிட்டார்கள். அன்னாருடைய பெயரைத்தான் அனஸ் பின் மாலிக் அவர்களுக்கு வைக்கப்பட்டது. அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அந்த நாளன்று நாங்கள் அன்னாரை எவ்வாறு கண்டோம் என்றால் அன்னாரின் உடலில் எழுபது காயங்களின் அடையாளங்கள் இருந்தன. அன்னாரின் சடலத்தை அன்னாருடைய சகோதரியை தவிர வேறு எவராலும் அடையாளம் காண முடியவில்லை. அன்னாரின் விரல்களில் இருந்த அடையாளத்தை வைத்து அவர் அடையாளம் கண்டு கொண்டு விட்டார். இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

அந்த நேரத்தில் மிகவும் கடுமையான போர் நிகழ்ந்து கொண்டிருந்தது. முஸ்லிம்களுக்கு மிகவும் கடுமையான காலகட்டமாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஷஹாதத் (வதந்தி) சம்பவத்தை கேட்டு பல ஸஹாபிகள் தைரியத்தை இழந்து விட்டனர். மேலும் ஆயுதங்களை வீசிவிட்டு மைதானத்திலிருந்து

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

விலகி ஒரு பக்கமாக சென்றுவிட்டனர். அவர்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் இருந்தார்கள். இந்த மக்கள் போர் மைதானத்தின் ஒரு பக்கமாக அமர்ந்திருந்தார்கள். அங்கு ஒரு ஸஹாபி அனஸ் பின் நஸ்ர் அன்ஸாரி (ரலி) அவர்கள் வந்தார்கள். அன்னார் (ரலி) அந்த மக்களைப் பார்த்து, நீங்கள் இங்கு என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்? என்று கேட்டார்கள்.அதற்கு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள்; இனி சண்டையிட்டு என்ன கிடைக்கப் போகின்றது? என்று கூறினார்கள். அதற்கு, இதுதானே சண்டையிடுவதற்கான நேரம்; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கிடைத்த மரணம் நமக்கும் கிடைக்கட்டும்; அன்னாருக்கு பிறகு உயிர் வாழ்வதில் என்ன இன்பம் இருக்கின்றது? என்று ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். பிறகு அன்னார்(ரலி) கூறினார்கள்: அன்னாருக்கு முன் ஸஃது பின் முஆஸ் அவர்கள் அமர்ந்ததும், ஸஃதே! எனக்கு உஹது மலையில் இருந்து சொர்க்கத்தின் நறுமணம் வந்து கொண்டிருக்கின்றது என்று அன்னாரிடம் கூறினார்கள். இவ்வாறு கூறி விட்டு அனஸ் (ரலி) எதிரிகளின் வரிசைகளுக்குள் நுழைந்து விட்டார்கள். பின்னர் சண்டையிட்டு, சண்டையிட்டு இறுதியில் ஷஹீது ஆகிவிட்டார்கள். போருக்கு பின் அன்னாரின் உடலில் 80-க்கும் அதிகமான காயங்கள் காணப்பட்டன. இது யாருடைய சடலம் என்று எவராலும் அடையாளம் காணப்பட முடியாமல் இருந்தது. இறுதியில் அன்னாருடைய சகோதரி அன்னாரின் விரலில் இருந்த இணைப்பின் அடையாளத்தை வைத்து அன்னாரது உடலை அடையாளம் கண்டு கொண்டார்கள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களும் இது தொடர்பாக கூறியுள்ளார்கள்: ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களின் தந்தையின் சகோதரர் உஹது போர் நிகழ்ந்தபோது அவரும் அந்தப் போரில் கலந்து கொண்டார். மேலும் மிகுந்த வீரத்தை வெளிப்படுத்தினார். சிறப்பாக சண்டையிட்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நிராகரிப்பாளர்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்தார்கள். இறுதியில் வெற்றிக் கிடைத்தது. வெற்றிக்குப் பிறகு முஸ்லிம்கள் எதிரிகளை சிறை கைதிகளாக பிடிப்பதற்கும், அவர்களின் செல்வங்களை ஒன்று திரட்டுவதிலும் மூழ்கினார்கள். அறிவீனமான எதிரியோ இதற்கு கொள்ளையடித்தல் என்று பெயர் சூட்டுகின்றான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்தப் போர் முடிந்ததும், முஸ்லிம்கள் போரில் கிடைத்த செல்வத்தை ஒன்று திரட்டிக் கொண்டிருந்தார்கள். இதனை எதிரி கொள்ளையடித்தல் என்று கூறுகின்றான். ஆனால், இது கொள்ளையடித்தல் அல்ல.மாறாக எதிரியை பலவீனப்படுத்துவதற்கான ஒரு வழிமுறையாகும்.

எவ்வாறு இருப்பினும், தற்போது நமது கடமை நிறைவடைந்து விட்டது என்று அவர்கள் கருதினர். அவர்களுக்கு பசியெடுத்து இருந்தது. ஒரு சில பேரீத்தம் பழங்கள் அவர்களிடம் இருந்தன. அவர்கள் போர் மைதானத்தை விட்டு சற்று பின்னால் விலகி வெற்றிக் களிப்பில் நடக்கத் தொடங்கினார்கள். மேலும், பேரீத்தம் பழங்களை உண்டு கொண்டிருந்தனர். அவற்றை உண்டவாறும், நடந்தவாறும் ஒரு பக்கமாக வந்தபோது, ஒரு கல்லில் அமர்ந்து கொண்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அழுது கொண்டிருப்பதை அவர்கள் கண்டனர். அவர்களைக் கண்டு வியந்தனர். அதாவது இன்று சிரிப்பதற்கான நாள்; மகிழ்ச்சிக்கான நாள்; இன்று வாழ்த்துச் செய்திகளை தெரிவிப்பதற்கான நாள் அல்லவா? நீங்கள் இந்த தருணத்தில் அழுது கொண்டு இருக்கின்றீர்களே? என்று கேட்டார்கள். அதற்கு, வெற்றிக்குப் பிறகு என்ன நடந்தது? என்று அநேகமாக உங்களுக்கு தெரியவில்லை போலும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு, என்ன நடந்தது? என்று அன்னார் (ரலி) கேட்டார்கள். அதற்கு, எதிரியின் படை பின்புறமாக வந்து மீண்டும் தாக்குதல் நடத்தி விட்டது; அதன் விளைவாக இஸ்லாமியப் படை சிதறுண்டு விட்டது; மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது, அவ்வாறு இருந்தால் என்ன, இது என்ன அழுவதற்கான சந்தர்ப்பமா? என்று அந்த அன்ஸாரி ஸஹாபி கூறினார். ஒரு பேரீத்தம் பழம் அன்னாருடைய கையில் எஞ்சியிருந்தது. அதனை உடனடியாக வீசிவிட்டு அன்னார் (ரலி) இவ்வாறு கூறினார்கள்: உனக்கும் எனது இறைவனுக்கும் இடையில் அதாவது அன்னார் (ரலி) பேரீத்தம் பழத்தை பார்த்தோ அல்லது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை பார்த்தோ இவ்வாறு கூறினார்கள்: உனக்கும் எனது இறைவனுக்குமிடையில் இந்த பேரீத்தம் பழத்தைத் தவிர வேறு என்ன கூறினார்கள்.

பின்னர் அன்னார் (ரலி) ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பார்த்து கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதாகி விட்டாகள் என்றால் பிறகு இந்த உலகில் நமக்கு என்ன வேலை இருக்கின்றது; அன்னார் (ஸல்) எங்கு சென்றார்களோ அங்கு நாமும் சென்றுவிடுவோம் என்று கூறியவாறு வாளை எடுத்துக் கொண்டு தனியாக ஆயிரக்கணக்கான எதிரிகளைக் கொண்ட படையினுள் நுழைந்து தாக்குதல் நடத்த துவங்கினார்கள். ஒரு நபர் ஆயிரக்கணக்கான எதிரிகளுக்கு மத்தியில் தனியாக என்ன செய்ய முடியும்? நாலாப்புறமிருந்தும் அன்னார் மீது தாக்குதல் நடத்தப்பட்டன. போருக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருடைய உடலைத் தேடச் செய்தபோது, அன்னாருடைய உடலின் 70 துண்டுகள் கிடைத்தன. இன்னும் கூறப்போனால் சில அறிவிப்புகளில் வருகின்றது: அன்னாரின் உடலை அடையாளம் கூட காணப்பட முடியவில்லை. இறுதியில் விரலின் ஓர் அடையாளத்தை வைத்து அன்னாருடைய சகோதரி அல்லது அன்னாரது ஏதேனும் ஓர் உறவினர் அன்னாரது உடலை அடையாளம் கண்டார்.

பிறகு மீண்டும் ஓரிடத்தில் இந்த சம்பவத்தை அன்னார் (ரலி) இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஷஹாதத் செய்தி பரவியபோது, அன்னார் அதாவது ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களின் தந்தையின் சகோதரர், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு குன்றின் மீது அமர்ந்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். அப்போது, உமரே! முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்து விட்டது; நீங்கள் ஏன் அழுகின்றீர்கள்? என்று அன்னார் (ரலி) வினவினார்கள். அதற்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள் என்பது உங்களுக்கு தெரியாதா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள். ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களின் தந்தையின் சகோதரர், அப்போது பேரீத்தம் பழங்களை சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரேயொரு பேரீத்தம் பழம் மட்டுமே கையில் எஞ்சியிருந்தது. அதனை வீசிவிட்டுக் கூறினார்கள்: எனக்கும் எனது இறைவனுக்கும் இடையில் இதைத் தவிர வேறு என்ன விஷயம் தடையாக இருக்க முடியும்? மேலும் அன்பின் அடிப்படையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை ஒரு ஏளனத்தோடு பார்த்தவாறு, உமரே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மறுவுலகிற்கு சென்று விட்டார்கள் என்றால், பின்னர் நீங்கள் இங்கு அமர்ந்து கொண்டு ஏன் அழுகின்றீர்கள்? எங்கு அன்னார் (ஸல்) சென்றார்களோ அங்கேயே நாமும் செல்வோம் என்று அன்னார் (ரலி) கூறியவாறு தனியாகவே மூவாயிரம் எதிரிகளை கொண்ட படையினுள் நுழைந்து தாக்குதல் நடத்தினார்கள். நிராகரிப்பாளர்கள் கூட அநேகமாக அன்னாரை பைத்தியக்காரர் என்று கருதியிருக்கலாம். அன்னார் (ரலி) சண்டையிட்டவாறு அன்னார் (ரலி) ஷஹீதாகிவிட்டார்கள். மேலும், போருக்குப் பிறகு அன்னாரின் உடல் தேடப்பட்டபோது, அது 70 துண்டுகளாக கிடைத்தன. ஒவ்வோர் இணைப்புகளும் தனித்தனியாக கிடந்தன.

அன்னாரின் ஷஹாதத் சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் பல்வேறு இடங்களில் விரிவாகவும் எடுத்துரைத்துள்ளார்கள்; சில இடங்களில் மிக அதிக விளக்கத்துடனும் எடுத்துரைத்துள்ளார்கள். சில இடங்களில் சுருக்கமாகவும் எடுத்துரைத்துள்ளார்கள். ஓரிடத்தில் அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

ஒரு ஹதீஸில் வருகின்றது. ஹஸ்ரத் அனஸ் பின் நஸ்ர் (ரலி) என்ற ஓர் அன்ஸாரி ஸஹாபி இருந்தார். அவர் தவறுதலாக பத்ர் போரில் கலந்து கொள்ளாமல் இருந்து விட்டார். பத்ர் போரில் கலந்து கொண்ட ஸஹாபிகள் போரில் நிகழ்த்திய வீரதீர செயல்களைக் கேட்டபோது, அவர் உத்வேகத்துடன் எழுந்து நடக்கத் துவங்கினார். மேலும், இது என்ன விஷயம்! எனக்கு வாய்ப்பு கிடைத்திருந்தால் நம்பிக்கையாளர் எப்படிப்பட்ட தியாகங்களை செய்கின்றார் என்பதை நான் காட்டியிருப்பேன் என்று கூறினார்கள். உஹது போரில் அன்னார் (ரலி) கலந்து கொண்டிருந்தார்கள். பின்புறம் இருந்து நடத்தப்பட்ட தாக்குதல்களின் காரணமாக முஸ்லிம்களின் பாதங்கள் வலுவிழந்து விட்டன. மேலும் அவர்கள் போர் மைதானத்தில் இருந்து சிறிது தூரம் வரை சென்று விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனியாக ஆகிவிட்டார்கள். மேலும், நிராகரிப்பாளர்களின் கல் எறிதல் சம்பவத்தினால் அன்னார் (ஸல்) அவர்கள் காயமுற்று பிற காயமுற்ற ஸஹாபிகளின் மீது விழுந்து விட்டார்கள். அதற்குள் இன்னும் சிலர் காயமுற்று அன்னார் (ஸல்) மீது விழுந்து விட்டனர். சில நிமிடங்களுக்கு பிறகு அன்னாரை மக்கள் காணாதபோது, அன்னார் (ஸல்) ஷஹீதாகிவிட்டார்கள் எனக் கருதிவிட்டனர். மேலும், சில மக்கள் ஓடி உஹதிற்கு அருகில் இருந்த மதீனாவிற்கு சென்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஷஹீதாகிவிட்டார்கள் என்ற செய்தியை பரப்பினர். இந்த செய்தியானது போர் மைதானத்திலிருந்து பின்புறமாக இருந்த

மக்கள் மீது இடியைப் போன்று விழுந்தது. அவர்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் ஒருவராக இருந்தார்கள். அன்னார் (ரலி) ஒரு கல்லின் மீது அமர்ந்து கொண்டு அழுது கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களோ போருக்கு முன்பாக எதையும் உண்டிருக்கவில்லை ; எனவே இரண்டு, மூன்று பேரீத்தம் பழங்களை சாப்பிட்டவாறு அன்னாரை கடந்து சென்றார்கள். அன்னார் (ரலி) முஸ்லிம்கள் வெற்றி அடைந்த பிறகுதான் போர்க் களத்திலிருந்து வெளியேறி இருந்தார்கள்; அப்போது நிராகரிப்பாளர்களுக்கு தோல்வி ஏற்பட்டிருந்தது. மேலும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களோ அப்போது அதாவது அந்த தருணத்தில் போர்க் களத்தில் இருந்து வந்திருந்தார்கள். அப்போது பின்பக்கம் இருந்து எதிரி மீண்டும் தாக்குதல் நடத்தியிருந்தான். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காயமுற்று விழுந்து விட்டார்கள். மேலும் அன்னார் (ஸல்) ஷஹீதாகி விட்டார்கள் என சில ஸஹாபிகள் கருதியிருந்தனர். அதன் காரணமாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அழுது கொண்டிருந்தார்கள். ஆனால், நமக்கு வெற்றி கிடைத்துவிட்டது என்று ஹஸ்ரத் மாலிக் (ரலி) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். அதனால், அன்னார் (ரலி) அழுதது அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அழுதது அன்னாருக்கு ஆச்சரியமாக இருந்தது. மேலும், அன்னார் (ரலி) வியப்புடன் பார்த்தார்கள். மேலும், உமரே! இது மிகவும் மகிழ்ச்சிக்குரிய தருணமா? அல்லது அழக்கூடிய நேரமா? அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கியுள்ளான். நாம் மகிழ்ச்சியை கொண்டாட வேண்டுமே! என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது தலையை உயர்த்தி அன்னாரைப் பார்த்தார்கள். மேலும்,அனஸே! போரின் நிலைமையே மாறிவிட்டது. அநேகமாக உங்களுக்கு அது தெரியவில்லை. எதிரி மலையின் பின்புறத்திலிருந்து வந்து திடீர் தாக்குதல் நடத்தினான். அந்தத் திடீர்த் தாக்குதலை தாக்குப் பிடிக்க முடியாமல் இஸ்லாமியப் படை சிதறுண்டு போய் விட்டது. மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் ஷஹீதாகிவிட்டார்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அப்போது அனஸ் (ரலி) அவர்களின் கையில் இறுதி பேரீத்தம் பழம் எஞ்சியிருந்தது. அப்போது, அன்னார் (ரலி) அந்தப் பேரீத்தம் பழத்தை பூமியில் வீசினார்கள். மேலும் கூறினார்கள்: எனக்கும் எனது நேசத்திற்குரியவனுக்கும் இடையில் இந்த பேரீத்தம் பழத்தை தவிர வேறு என்ன தடையாக இருக்க முடியும்? பிறகு, உமரைப் பார்த்து கூறினார்கள்: நீங்கள் கூறுவது உண்மையென்றால் பிறகு இது அழுவதற்கான தருணம் அல்ல.மாறாக எங்கு நமது நேசத்திற்குரியவர் சென்று விட்டாரோ அங்கு செல்வதற்கு நாமும் ஆயத்தமாக வேண்டும் என்று கூறி உறையிலிருந்து வாளை உருவியவாறு எதிரியின் படைக்குள் நுழைந்தார்கள். ஒரு தனிநபர் நூற்றுக்கணக்கான மனிதர்களை எவ்வாறு எதிர் கொள்ள முடியும்? சில மணித் துளிகளிலேயே அன்னாரின் உடல் துண்டு துண்டாகி பூமியில் சிதறிப் போனது. இறைவன் முஸ்லிம்களுக்குக் வெற்றியை வழங்கினான். பின்னர் அனஸ் பின் நஸ்ரை தேடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். அன்னார் எங்கு இருக்கின்றார்கள்? என்று தெரியவில்லை எனத் தகவல் தெரிவித்தனர். மீண்டும் அன்னாரைத் தேடுமாறு அன்னார் (ஸல்) கட்டளையிட்டார்கள். அதற்குள், ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள் என்ற துக்ககரமான செய்தியை கேட்டு மதீனாவிலிருந்து ஓடோடி அன்னாருடைய சகோதரி போர்க் களத்தை வந்தடைந்தார். இறுதியில் போர்க் களத்தில் ஓரிடத்தில் அன்னாரின் உடல் துண்டு துண்டாக கிடப்பதை அவர் கண்டார். அந்த துண்டுகளில் இருந்து ஒரு விரலின் அடையாளத்தை வைத்து இது என்னுடைய சகோதரர் மாலிக்கின் உடலாகும் என்று அடையாளம் கண்டார். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக்கு அதனை தெரியப்படுத்தினார். இதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இருந்த நேசம் ஆகும். இந்தக் குறிப்பு தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இன்ஷா அல்லாஹ் எதிர் வரும் காலத்திலும் எடுத்துரைக்கப்படும்.

இன்றைய நாட்களில் ஏமன் நாட்டின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அவர்கள் மிகவும் துயரங்களை எதிர் கொண்டு வருகின்றார்கள். அதேபோன்று முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களிடம் ஒற்றுமையை ஏற்படுத்துவானாக!அவர்களுக்கு அறிவையும், புரிதலையும் வழங்குவானாக! உலகின் பொதுவான நிலைமைகளுக்காகவும் துஆ செய்யுங்கள். உலகம் மிக வேகமாக போரை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றது. அல்லாஹ் கருணை காட்டுவானாக.

நான் தொழுகைக்குப் பிறகு இரண்டு ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைப்பேன். இன்ஷா அல்லாஹ். முதலாவதாக நான் எடுத்துக் கூறுவது, ஸிராலியோனின் நாயிப் அமீர் மதிப்பிற்குரிய அப்துல் ஹமீத் கமாங்கா ஸாஹிப் அவர்களுடையது ஆகும். அன்னார் சிறிது நாட்கள் நோயுற்று இருந்த பிறகு, 13 ஜனவரி அன்று தமது 45-வது வயதில் இறை நியதிக்கேற்ப மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூம் அல்லாஹ்வின் அருளினால் வஸிய்யத் செய்திருந்தார்கள். ஸிராலியோனின் அமீர் ஜமாஅத் மூஸா மேவா ஸாஹிப் எழுதுகின்றார்கள்: டாக்டர் கமாங்கா ஸாஹிப் ஸிராலியோனில் அனைவரையும் விட அதிகமாக வஸிய்யத் சந்தா செலுத்துபவராக இருந்தார்கள். கூறுகின்றார்கள்: மக்களுக்கு ஒரு புதிய ஜல்ஸா திடல் வாங்குவதற்காக பொருள் உதவி செய்யுமாறு இந்த எளியவன் விண்ணப்பம் செய்தபோது டாக்டர் ஸாஹிப் அனைவரையும் விட அதிக தொகையை வாக்குறுதியாக வழங்கினார்கள். மேலும் பத்தாயிரம் அமெரிக்கன் டாலர்களை நன்கொடையாக தமது மரணத்திற்கு முன்னர் வழங்கினார்கள். டாக்டர் ஸாஹிப் நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் ஐந்து ஆண்டுகள் தம்மை அர்ப்பணித்து இருந்தார்கள். அவர்கள் நைஜீரியாவில் பணியமர்த்தப்பட்டார்கள். ஆனால் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. காகிதப் பணிகள் முழுமையடையாமல் இருந்து வந்தன. இதற்கு இடைப்பட்ட காலத்தில் நமது ஒரு பாகிஸ்தானி மருத்துவர் சென்றதன் காரணமாக ஃபீரிடவுண் மருத்துவமனையில் அன்னாருக்கு தொண்டாற்றுவதற்கான நற்பேறு கிடைத்தது. மிகுந்த உழைப்புடன் அங்கு பணியாற்றி வந்தார்கள். மேலும், இந்த இடைப்பட்ட காலத்தில் அன்னாருக்கு மருத்துவ மனையிலேயே அன்னாருக்கு உரிய பங்கில் இருந்து எவ்வளவு தொகை கிடைத்தாலும் அதனை மருத்துவ மனைக்கு நன்கொடையாக வழங்கினார்கள். மருத்துவமனையை அழகுப்படுத்துதல் மற்றும் மறுசீரமைப்பு பணிகளையும் செய்தார்கள். இந்தத் தொகையின் மதிப்பு என்பது உள்ளூர் கரன்சியின் அடிப்படையில் இரண்டு லட்சம் லியோன் ஆகும். கிலாஃபத்தின் மீதும் அதிக நேசம் இருந்தது. அன்னாரின் வாழ்க்கையில் மிகுந்த வருத்தம் என்னவாக இருந்தது என்றால், காலத்தின் கலீஃபாவுடன் சந்திப்பு நிகழ முடியாமல் இருந்தது. என்னை சந்திப்பதற்கு மிகவும் முயற்சி செய்து வந்தார்கள். ஆனால் அவர்களுக்கு விசா கிடைக்கவில்லை. இரண்டு முறை முயற்சித்தார்கள். மருத்துவ தொண்டின்போதுடைய தேவையுடைய நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை செய்து வந்தார்கள். பல அஹ்மதி மாணவர்களுக்கு அதாவது எவர்களின் பெற்றோர்களால் கல்விக் கட்டணம் செலுத்த முடியாமல் இருந்த வந்ததோ அவர்களுக்கு டாக்டர் ஸாஹிப் கல்விக் கட்டணம் செலுத்தி வந்தார்கள். மிகவும் ஈமான் கொண்ட, கடின உழைப்புக் கொண்ட மற்றும் பிறருக்கு உதவி செய்யக் கூடியவராக மர்ஹூம் இருந்தார்கள். அன்னாரின் திருமணமானது இங்குள்ள நமது டோனிக் காலூன் ஸாஹிப் அவர்களின் இளைய சகோதரியான காதியா தாகமோங்கா ஸாஹிபாவுடன் நடந்திருந்தது. அவர்களுக்கு இரண்டு சிறிய பிள்ளைகள் உள்ளன. ஒரு குழந்தைக்கு அநேகமாக மூன்று அல்லது நான்கு வயது இருக்கும். மற்றொரு பிள்ளைக்கு ஒரு வயது ஆகும். ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர்.

அங்குள்ள முரப்பி ஸயீதுல் ஹஸன் ஸாஹிப் கூறுகின்றார்கள்: பல அம்சங்களுக்கு சொந்தக்காரராக அன்னார் இருந்தார்கள். நான் தனிப்பட்ட முறையில் அன்னாரை அறிவேன். புதிய அமீராக மூஸா மேவா ஸாஹிப் ஆன பிறகு அன்னாருடைய அணியில் மிகச் சிறந்த உறுப்பினராக டாக்டர் கமாங்கா ஸாஹிப் இருந்தார்கள்.

கென்யாவில் மகப்பேறு மருத்துவத் துறையில் சிறப்புப் பட்டம் பெற்று ஸிராலியோன் வந்தார்கள். கடினமாக உழைப்பது அன்னாரது சிறப்பு அம்சமாகும்.இரவு பகலாக உழைப்பார்கள். தமது மனைவி, மக்கள் தமக்காக காத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை கூட அன்னார் மறந்து விடுவார்கள். திருக்குர்ஆனை மனனம் செய்திருந்தார்கள். மிகவும் அழகிய குரலில் திலாவத் செய்து வந்தார்கள்.

இவர்கள் கூறுகின்றார்கள்: கடந்த ரமலானில் தலைமையகத்தில் அன்னார் தராவீஹ் தொழுகையையும் தொழ வைத்தார்கள். மக்கள் இதனால் மிகுந்த இன்பம் அடைந்தார்கள். பணிவும் டாக்டர் ஸாஹிபிடத்தில் காணப்பட்ட சிறப்பான ஒரு பண்பாக இருந்தது. எப்போதும் சிரித்த முகத்துடன் சந்திப்பார்கள். மேலும் தமது

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

நோயையும், கஷ்டத்தையும் மறைத்து வந்தார்கள்.

ஸஃபீர் அஹ்மத் ஸாஹிப் கூறுகின்றார்கள். டாக்டர் ஸாஹிப் பல அம்சங்களுக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். இவர்களது தமது பகுதியில் மிகவும் புகழ் பெற்றவராக இருந்தார்கள். அல்லாஹ் அன்னாரது கையில் குணத்தை வைத்திருந்தான். மக்கள் அன்னாரிடம் சிகிச்சைக்காக வருவார்கள். அன்னார் அவர்களின் பௌதீக நோயுடன் அவர்களது ஆன்மிக நோய்க்கும் சிகிச்சை செய்து வந்தார்கள். அவர்களுக்கு அஹ்மதிய்யா இயக்கத்தின் போதனைகளை தெரியப்படுத்துவார்கள். தொழுகையையும், நோன்பையும் பேணக் கூடியவராக இருந்தார்கள். குறித்த நேரத்தில் சந்தா செலுத்தி விடுவார்கள். தஹஜ்ஜுத் தொழக்கூடியவராகவும் இருந்தார்கள். ஜமாஅத் பணிகளுக்காக தனது உலகப் பணிகளையும் விட்டு விட்டு ஜமாஅத்தின் குரலுக்கு செவிமடுத்தவாறு உடனடியாக லெப்பைக் என்று கூறுவார்கள். ஜமாஅத்தின் பொறுப்பாளர்களுக்கும், முரப்பிமார்களுக்கும் மிகுந்த கண்ணியமளிப்பார்கள். ஜுமுஆ தொழுகைக்காக சிறப்பாக ஆயத்தம் ஆவார்கள். அனைத்துப் பணிகளையும் விட்டு விட்டு ஃபோர்ட்லோகோவில் உள்ள ஜமாஅத் பள்ளிவாசலுக்கு ஜுமுஆ தொழுகையை நிறைவேற்றுவதற்காக வருவார்கள்.

இரண்டாவது நாயிப் அமீர் அப்துல் ஹைய் கரோமா ஸாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: டாக்டர் கமாங்கோ ஸாஹிப் ஸிராலியோனின் உள்ளூர் மொழியான மேன்டே மொழியில் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு கமிட்டியின் உறுப்பினராகவும் இருந்தார்கள். ஐவேளை தொழுகைகளை முறையாகப் பேணக் கூடியவராகவும், தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும் இருந்தார்கள். கூறுகின்றார்கள்: சரியான முறையில் வாழ்வை அர்ப்பணித்தவராக இருந்தார்கள். அரசாங்கப் பணியை முடித்த பிறகு அஹ்மதிய்யா மருத்துவ மனைக்கு செல்வார்கள். மஃரிப் நேரம் வரை அங்கு பணி செய்வார்கள். அதன் பிறகு மிஷன் ஹவுஸ் வந்துவிடுவார்கள். பிறகு இரவு நீண்ட நேரம் வரை பணி செய்வார்கள். பின்னர் வீட்டுக்குச் செல்வார்கள். அன்னாருக்கு அதிகமாக உண்மையான கனவுகள் வந்துள்ளன. அவற்றின் உண்மையும் வெளிப்பட்டு விடும். காலத்தின் கலீஃபாவின் வழிகாட்டலுக்கு ஏற்ப ஜமாஅத்திற்கு எதிர்காலத்தில் பணி செய்யக் கூடிய அதிக மக்கள் கிடைக்கும் விதத்தில் பத்தாண்டு கல்விக் கொள்கையை அன்னார் வகுத்தார்கள்.

இவர்கள் கூறுகின்றார்கள்: நாயிப் அமீர் என்ற முறையில் இந்த எளியவனுக்கு மர்ஹூமுடன் ஆழமான தொடர்பு இருந்தது. ஜமாஅத்துடனான அன்பு, இறைவனுக்குரிய உரிமைகளை செலுத்துதல், படைப்பினங்களுக்குரிய உரிமைகளை செலுத்துதல், கொடை, பணிவு மற்றும் பொருள் தியாகம் போன்ற பல நற்பண்புகள் அன்னாரிடம் இருந்தன.

அல்வாமீ ஸீஸா ஸாஹிப் கூறுகின்றார்கள்: அவர்கள் 1989-ம் ஆண்டில் ஜாமிஅத்துல் முபஷ்ஷிரீனில் சேர்ந்தார்கள். 1991-ம் ஆண்டு கல்வியை முழுமை செய்தார்கள். படிப்பில் நல்ல மதிப்பெண்கள் வாங்கினார்கள். எப்பொழுதும் உயர் மதிப்பெண்களுடன் தேர்ச்சிப் பெற்று வந்தார்கள். எங்கு அன்னார் முதன் முதலில் பணியமர்த்தப்பட்டார்களோ அங்குதான் மர்ஹூம் திருக்குர்ஆனை மனனம் செய்ய ஆரம்பித்தார்கள். சுயமாகவே மனனம் செய்தார்கள். பிறகு உள்நாட்டுப் போர் ஆரம்பமானது. ஸிராலியோனிலிருந்து அனைத்து பாகிஸ்தான் முரப்பிமார்களுக்கும் செல்ல வேண்டி வந்தது. டாக்டர் ஸாஹிப் பிறகு ஃபீரிடவுண் வந்து விட்டார்கள். மிஷனரி பணியை செய்து வந்தார்கள். அந்தக் காலத்தில் பொறுப்பு அமீராகவும் இருந்துள்ளார்கள். இங்கு தலைமையகத்திலிருந்து சில பொருட்கள் ஸிராலியோனிற்கு அனுப்பப்பட்டு வந்தன. சில கிளர்ச்சியாளர்களுக்கு இது தெரிய வந்தபோது, மிஷன் ஹவுஸை அவர்கள் தாக்கினர். எவ்வாறு இருப்பினும் டாக்டர் ஸாஹிப் மறைந்து கொண்டார்கள். அறிவிப்பாளர் ஒருவர் கூறுகின்றார்: மர்ஹூம் கிளர்ச்சியாளர்களின் பிடியில் வந்து விட்டார்கள். அவர்கள் தலையில் துப்பாக்கியை வைத்து ஸ்டோரின் சாவியை கொடுத்து விடுங்கள் என்று கூறினர். இப்படிப்பட்ட ஒரு நிலையைப் பார்க்கும்போது உண்மையிலேயே அது மிகவும் ஓர் அபாயகரமான நிலையாகும். டாக்டர் கமாங்கா ஸாஹிப் அவர்கள் தம்மிடமிருந்த சாவியை உடனடியாக கொடுத்தார்கள். அவர்கள் அதிலிருந்து சில பொருட்களை எடுத்தார்கள். பிறகு சென்றுவிட்டார்கள்.

காலித் முஹம்மது ஸாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: டாக்டர் ஸாஹிப் அவர்களுக்கு கிலாஃபத்துடன் மிகுந்த நேசமும், பற்றுறுதியும் இருந்தது. களங்கமற்ற மனிதராக இருந்தார்கள். அனைவருக்கும் கண்ணியமளிக்கக் கூடியவராக இருந்தார்கள். ஜமாஅத்திற்காக வேதனையுடையவராக இருந்தார்கள். ஒவ்வொரு சிறியவருடனும், பெரியவருடனும் மிகுந்த கண்ணியத்துடன் நடப்பார்கள். ஜமாஅத்தின் முன்னேற்றங்களுக்காக எந்த ஆலோசனை வழங்கப்பட்டாலும் உடனடியாக அதனை ஏற்பார்கள். ஜமாஅத்தின் முன்னேற்றங்களுக்காக முயற்சி செய்யக்கூடிய மக்கள் ஜமாஅத்தில் எப்போதும் இருக்க வேண்டும் என்று கூறுவார்கள். பிறகு கூறுகின்றார்கள்: தவறை தவறென்றும்,சரியை சரியென்றும் கூறக்கூடிய அன்னாரைப் போன்ற மனிதர்களை மிகக் குறைவாகவே நான் பார்த்துள்ளேன். டாக்டர் ஸாஹிப் மிகவும் துணிச்சலான மற்றும் தைரியமான மனிதராக இருந்தார்கள். அன்னாரின் பேசக் கூடிய முறையோ மிகவும் அழகானதாக இருந்தது. மென்மையான முறையில் அனைவருடனும் பேசுவார்கள். அனைத்துப் பணிகளையும் விட்டு விட்டு தொழுகையை நிறைவேற்றுவார்கள். ஒருவர் கடுமையாக பேசினாலும் கூட மென்மையாக பதிலளிப்பார்கள். அத்துடன் ஓர் அஹ்மதி இவ்வாறு கடுமையான முறையில் பேசக் கூடாது என்பதை அவருக்கு எடுத்துரைப்பார்கள்.

லஜ்னா இமாயில்லாஹ் யூ.கே ஸிராலியோனில் தனது ஒரு மகப்பேறு மருத்துவமனையை நிறுவிக் கொண்டிருக்கின்றது. அல்லாஹ்வின் அருளினால் மிகப் பெரிய புராஜெக்ட் ஆகும். முன்னாள் ஸதர் லஜ்னா டாக்டர் ஃபரீஹா ஸாஹிபா அவர்கள் பார்வையிடுவதற்காக சென்றிருந்தார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: மர்ஹூம் மனிதர்களுக்கு பயனளிக்கக் கூடிய ஓர் இருப்பாக இருந்ததை நான் கண்டேன். லஜ்னாவின் மகப்பேறு மருத்துவ மனையை பார்வையிடுவதற்காக சென்றபோது, டாக்டர் ஸாஹிபுடன் சந்திப்பு நிகழ்ந்தது. லஜ்னாவின் மருத்துவமனை தொடர்பாக பல்வேறு விலைமதிப்பற்ற ஆலோசனைகளை வழங்கினார்கள். அரசு மருத்துவமனைக்கும் என்னை அழைத்துச் சென்றார்கள். மனித குலத்திற்கு தொண்டாற்ற வேண்டும் என்ற அன்னாரிடம் இருந்த உணர்வு என்னிடம் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. கடினமான சூழ்நிலைகள் இருந்தபோதிலும், எண்ணற்ற நோயாளிகள் அவர்களிடம் வந்தபோதிலும் முகத்தில் புன்சிரிப்பு மற்றும் அனுதாபத்திற்கான உணர்வை தவிர வேறு எதுவும் இருக்காது. ஓர் விநோதமான அன்பு அன்னாரிடம் இருந்தது.தனது நாட்டின் குடிமக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற உணர்வு அன்னாரிடம் இருந்தது.

எவ்வாறு இருப்பினும், அங்கு மகப்பேறு மருத்துவமனை வந்துவிட்டால் இவர்களை பணியமர்த்தலாம் என்று அன்னார் கருதியிருந்தார்கள். ஆனால், அல்லாஹ்விற்கென பணிகள் இருக்கின்றன.

அன்னாரின் மனைவி காதியா ஸாஹிபா கூறுகின்றார்கள்: எனது கணவர் ஒரு நல்ல மனிதராக இருந்தார்கள். ஜமாஅத்தின் மீது நன்றியுணர்வு கொண்ட மற்றும் தூய அஹ்மதியாக அன்னார் இருந்தார்கள். எப்பொழுதும் தமது சொந்த விவகாரத்தை விட ஜமாஅத்திற்கு முன்னுரிமை வழங்கி வந்தார்கள். சிகிச்சைக்காக அன்னார் செனிகால் சென்றிருந்தார்கள். செல்வதற்கு முன்னர் அன்னார் என்னிடம் கூறினார்கள்: நம்முடைய ஈமான் மற்றும் அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை போன்றவையே நமக்கானதாகும். எனவே என்ன ஆனாலும் நீர் குழப்பம் அடைய வேண்டாம்.

கூறுகின்றார்கள்: தமது நோயாளிகளுக்கு குறிப்பாக அஹ்மதிகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிப்பார்கள். அவர்களை கருத்தில் கொள்வார்கள். எனது கணவரின் பல நற்பண்புகள் அன்னாரின் மரணத்திற்கு பிறகு தற்போது எனக்கு தெரிய வந்துள்ளன. மக்கள் என்னிடம் கூறினார்கள். அன்னாரின் மனைவி கூறுகின்றார்கள்: ஐவேளை தொழுகைகளை தொழக் கூடியவராகவும்,தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும், முறையாக தனது வருமானத்திற்கு ஏற்ப வஸிய்யத் கணக்கை சரி செய்து சந்தா கொடுக்கக் கூடியவராகவும் அன்னார் இருந்தார்கள் என்று நான் சாட்சி கூறுகின்றேன். ஒவ்வோர் ஆண்டும் ரமலான் மாதத்தில் திருக்குர்ஆனை குறைந்தது ஒரு முறை ஓதி முடிப்பார்கள். அவ்வாறு செய்யுமாறு எனக்கும் அறிவுறுத்துவார்கள். மிகச் சிறந்த கணவராகவும், தந்தையாகவும் இருந்தார்கள். மேலும் மகிழ்ச்சியாக வைக்கக் கூடியவராகவும் இருந்தார்கள்.

அல்லாஹ் மர்ஹூமுடன் கருணை மற்றும் பாவமன்னிப்புடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் அந்தஸ்தை உயர்த்துவானாக. அன்னாரின் மனைவி மக்களுக்கு பாதுகாவலனாகவும், உதவியாளனாகவும் அல்லாஹ்


*திருக்குர்ஆனிலிருந்து...*

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

இருப்பானாக.

இரண்டாவது நற்குறிப்பு, தாஹிரா நஸீர் பேகம் ஸாஹிபா அவர்களுடையதாகும். இவர்கள் ஜமாஅத்தின் முரப்பி சவ்த்ரி ரஷீதுத்தீன் ஸாஹிப் அவர்களின் மனைவி ஆவார்கள். இவர்களும் கடந்த நாட்களில் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளினால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். அன்னாரின் குடும்பத்தில் அன்னாரின் தந்தை வழிப் பாட்டனார் சவ்த்ரி குலாம் ஹுஸைன் ஸாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அதேபோன்று அன்னாரின் தாய் வழிப் பாட்டனார் தாரேவாலைச் சேர்ந்த சவ்த்ரி குலாம் ஹைதர் ஸாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஸஹாபியாக இருந்தார்கள். மர்ஹூமாவின் நிக்காஹ் நான் கூறியதுபோன்று சவ்த்ரி ரஷீதுத்தீன் ஸாஹிப் அவர்களுடன் நிகழ்ந்தது. 1958-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி)அவர்களின் முன்னிலையில் மவ்லானா ஜலாலுத்தீன் ஸாஹிப் ஷம்ஸ் அவர்கள் நடத்தினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் துஆ செய்து வைத்தார்கள். இவர்கள் தம்முடைய ஒரு கனவைக் குறித்து கூறுகின்றார்கள். 1980-ம் ஆண்டு மஜ்லிஸே முஷாவரத்தில் செல்வதற்கு எனக்கு அனுமதிச் சீட்டு கிடைத்தது. நான் பிரதிநிதியாக ஆனேன். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ்(ரஹி) அவர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். சபையில் ஸஹாபா தொடர்பாக, வயது அடிப்படையில் யார் ஸஹாபி? யார் இல்லை? என்ற விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நான் வீட்டிற்கு வந்து மிகவும் ஏக்கத்துடன் கூறிக் கொண்டிருந்தேன். அல்லாஹ்வே! நானும் அப்போது இருந்திருந்தால் நான் ஸஹாபியாக்களில் இணைந்திருப்பேனே! கூறுகின்றார்கள்: அப்போது நான் கனவு கண்டேன். நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை சந்திக்கின்றேன். ஒளிமிக்க ஹுஸுர் அவர்கள் எனது வீட்டில் வலது பக்கமாக ஒருக்கணித்து படுத்திருக்கின்றார்கள். நான் அன்னாரின் தலைமாட்டில் அருகே சென்று நின்று விடுகின்றேன். ஹுஸுர் (அலை) அவர்கள் மிகுந்த அன்புடன் என்னைப் பார்த்து எவ்வாறு வந்தீர்கள்? என்று வினவினார்கள். அதற்கு, ஹுஸுர்(அலை) தங்களுக்கு அமுக்கி விட விரும்புகின்றேன் என்றேன். அதற்கு, ஹுஸுர் (அலை) அவர்கள் தமது வலக்கையை என்னிடத்தில் தந்தார்கள். நான் வெகுநேரமாக அமுக்கிக் கொண்டிருந்தேன். அதன் பின்னர் ஹுஸுர் (அலை) அவர்கள் மஹ்ரிப் தொழுகைக்காக முற்றத்திற்குச் சென்றார்கள். நானும் வெளியில் செல்கிறேன். அங்கு பெரும் கூட்டம் இருப்பதை நான் காண்கிறேன். மக்கள் ஜன்னல்களின் மீதும், வெளிச்சத்திற்கான ஜன்னல்களின் மீதும் ஏறி ஹுஸுர் (அலை) அவர்களை காண்பதற்காக நிற்கின்றார்கள். ஹுஸுர் (அலை) அவர்கள் எனது வீட்டிற்கு வந்துள்ளார்கள் என்று உங்களுக்கு எவ்வாறு தெரிந்தது? என்று அந்த மக்களிடம் நான் கேட்கின்றேன். அதற்கு உங்களுடைய வீட்டிற்கு வந்து, அது எங்களுக்கு தெரியாமல் இருப்பது எவ்வாறு சாத்தியம்? என்று மக்கள் கூறினர். : வீட்டில் ரொட்டி சமைக்கின்ற பெண்மணியை அழைத்து, ரொட்டி சமைப்பதை விட்டு விடுங்கள்; ஹுஸுர் (அலை) நமது வீட்டிற்கு வந்துள்ளார்கள். மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் வந்துள்ளார்கள்; அவர்களை வந்து பாருங்கள் என்று நான் கூறுகின்றேன். அதன் பிறகு நான் கூறுகின்றேன்: ஹுஸுர் (அலை) அவர்களைப் பார்த்தால் ஸஹாபிகளில் இணைந்து விடுவார்கள் என்று ஷுஃரவில் கூறினார்களே! எனது வீட்டில் ஹுஸுர் (அலை) அவர்கள் இரு பகல்களும், ஓர் இரவும் தங்கியுள்ளார்கள்; நானும் ஸஹாபிகளின் வட்டத்தில் இணைந்து விட்டேன். ஆக, கூறுகின்றார்கள்: அல்லாஹ்விற்கு எண்ணற்ற நன்றிகள்! நான் எவ்வாறு நன்றி செலுத்துவது!

அன்னாரின் மகன் டாக்டர் அலீமுத்தீன் இங்கு வசிக்கின்றார்கள். அயர்லாந்தில் தேசிய ஸத்ராகவும் இருந்துள்ளார்கள். இன்றைய நாட்களில் இங்கு வசிக்கின்றார்கள். கூறுகின்றார்கள்: அல்லாஹ் எங்களது தாயாருக்கு எண்ணற்ற சிறப்புகளை வழங்கியுள்ளான். அவற்றில் குறிப்பிடத்தக்க வகையில் அல்லாஹ்வுடனான தொடர்பும்,அல்லாஹ்வின் மீதான நேசமும் இருந்தது. அல்லாஹ்வின் புறமிருந்து வழங்கப்பட்ட துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய பண்பானது அன்னாரிடம் மிகவும் தென்படக் கூடியதாக இருந்தது. இவர்கள் நல்ல கனவுகளை காணக்கூடியவர்களாக இருந்தார்கள். அஹ்மதிய்யா கிலாஃபத்தின் மீது தனிப்பட்ட நேசம் இருந்தது. அது வாழ்நாள் முழுவதும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. அதனை தமது சந்ததிகளிடமும் தொடரச் செய்வதற்காகவும் அன்னார் முயற்சி செய்து வந்தார்கள். பிறகு கூறுகின்றார்கள்: குழந்தைப் பருவத்தில் எங்களுடைய வீட்டில் எந்தெந்த சான்றோர்களைப் பற்றியெல்லாம் பேசப்பட்டதோ, மேலும் எவர்களைக் குறித்து தாயார் கூறிவந்தார்களோ அவர்கள் ஒன்றும் உலகளவில் சிறந்த அந்தஸ்தைப் பெற்றவர்களாக இருக்கவில்லை. மாறாக, கலீஃபாக்களாகவும், நல்ல சான்றோரான பெண்மணிகளாகவும் இருந்தார்கள். அவர்களின் பெயர்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே எங்களின் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தன. மேலும் எங்களது தாயார் அந்த சான்றோர்களுக்காகவும் தொடர்ந்து துஆவிற்காகவும் கூறிவந்தார்கள். அன்னார் மற்றவர்களிடம் துஆவிற்காக கூறாமல் தாம் மட்டுமே துஆ செய்யக் கூடியவராக இருக்கவில்லை. தாமும் மக்களிடம் சென்று துஆவிற்காக கூறிவந்தார்கள். இவர்கள் கூறுகின்றார்கள்:

அதை விட தாயாரிடம் காணப்பட்ட மிகத் தெளிவான பண்பு என்பது ஜமாஅத்திற்காக அதிக தன்மானம் கொண்டவராக இருந்தது ஆகும். ஒருமுறை எங்களது குடும்பத்தில் உறவினர்களில் ஒரு தூரத்து உறவினர் ஜமாஅத்தைப் பற்றி ஏதோ தவறான சொற்களை கூறிவிட்டார். பொதுவாக இதுபோன்ற பேச்சைக் கேட்டு மக்கள் அமைதியாகிவிடுவார்கள். ஆனால், தாயார் அவர்கள் உடனடியாக அவருக்கு கடுமையாக பதில் கொடுத்தார்கள். முதலில் அவர்களை தடுத்தார்கள். பிறகு அதை திருத்தினார்கள். மேலும் இவர்கள் எந்த உறவினரிடமும் சண்டை கூட போடுவார்கள்; ஆனால் ஜமாஅத்தின் தன்மானத்தில் எந்த களங்கத்தையும் ஏற்படுத்த விட மாட்டார்கள் என்று குடும்பத்தில் அதிகம் பிரபல்யம் அடைந்திருந்தார்கள். அவர்களுடைய கணவர் சவ்த்ரி ரஷீதுத்தீன் ஸாஹிப் அவர்கள் இருமுறை தப்லீஃக்கிற்காக வக்ஃப் செய்து முரப்பியாக இருந்தார்கள். ஆஃப்ரிக்கா சென்றார்கள்; இவர்கள் பாகிஸ்தானில் இருந்தார்கள். மேலும் தமது குழந்தைகளின் தர்பிய்யத்தின் பக்கம் முழுமையாக முயற்சி செய்து வந்தார்கள். கூறுகின்றார்கள்: எங்களுக்கு நினைவு இருக்கின்றது. எங்களது சகோதரர்களின் தனிப்பட்ட நண்பர்களைக் குறித்தும் அன்னார் அறிந்திருந்தார்கள். யார், யார் எப்படிபட்டவர்கள் என்பதையும் அன்னார் அறிந்திருந்தார்கள். மேலும், எப்பொழுதும் நல்ல படிக்கக் கூடியவர்களுடன் நட்பு பாராட்ட வேண்டும்; அப்படி, இப்படி இருக்கின்ற எல்லாருடனும் (நட்புக்) கூடாது என்று கூறிவந்தார்கள். பிறகு கூறுகின்றார்கள்:

நான் கண்ட ஒரு விஷயம் என்னவென்றால், பெரும்பாலும் அன்னார் அல்லாஹ்வுடன் தொடர்பு கொண்ட பெண்களுடன் நட்புக் கொண்டிருந்தார்கள். உலகவாதிகளின் சபைகளில் எனக்கு இன்பம் கிடைப்பதில்லை ; மாறாக எளிமையாக உள்ள மற்றும் மார்க்கத்தில் ஆர்வம் கொண்டுள்ளவர்களுடன் இருப்பதில்தான் எனக்கு இன்பம் இருக்கின்றது என்று அன்னார் கூறுவார்கள்.

அன்னாரின் மகள் ஸப்தா ஸாஹிபா கூறுகின்றார்கள்.அன்னாருக்கு இரண்டு மகள்கள். ஒருவர் ஆபிதா ஸாஹிபா, மற்றொருவர் ஸப்தா ஸாஹிபா ஆவார். கூறுகின்றார்கள்: எங்களுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து, நாங்கள் எங்களது தாயாரை இறைவணக்கம் செய்யக்கூடியவராகவும்,துஆ செய்யக் கூடியவராகவும், நல்லமுறையில் பழகக் கூடியவராகவும் சிறந்த ஒழுக்கம் கொண்டவராகவும் கண்டோம். மிகவும் உருக்கத்துடன் இறை வணக்கத்தை மேற்கொள்வார்கள். எப்போது எந்த பிரச்சனை வந்தாலும் அன்னார் தமது அறைக்குள் சென்று, அறையை அடைத்துக் கொண்டு நீண்ட நேரம் ஸஜ்தாவில் இருப்பார்கள். மேலும் வாழ்வை அர்ப்பணித்தவருடன் இருந்ததன் காரணமாக கஷ்டமான சூழல்களும் சிலவேளை வந்தது. ஆனால், மிகுந்த பொறுமையுடனும், தைரியத்துடனும், துணிச்சலுடனும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டவாறு அவற்றை சகித்துக் கொண்டார்கள். இறைவனிடமே கேட்பார்கள். இவர்களுக்கு ஹஜ்ஜிற்கு செல்வதற்கான நற்பேறும் கிடைத்தது. அல்லாஹ் இவர்களின் இந்த ஆசையையும் பூர்த்தி செய்தான். 11 முறை அன்னார் இஃதிகாஃப் அமர்ந்துள்ளார்கள்.

இவர்களின் மகள்கள் கூறுகின்றார்கள்: வரக் கூடிய மக்கள் அன்னாருடைய பரிவு மற்றும் அழகியமுறையில் சந்தித்தல் போன்றவற்றை பற்றி எடுத்துரைப்பார்கள். குறிப்பாக மார்க்க நூல்களை படித்து வந்தார்கள். அதிலும் குறிப்பாக வாழ்க்கை வரலாற்று நூல்களை அதிகம் படித்து வந்தார்கள். ஜுமுஆ நாளன்று

---

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

சிறப்பாக ஆயத்தமாகி வந்தார்கள். பல மணி நேரத்திற்கு முன்பே பள்ளிவாசலுக்கு சென்று நஃபில்களை தொழுவார்கள்.

முரப்பியான அன்னாருடைய ஒரு மகன் சவ்த்ரி ஸலீமுத்தீன் ஸாஹிப் இன்றைய நாட்களில் ரப்வாவில் நாஸிர் உமூரே ஆமாவாக இருக்கின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: தாயார் வாழ்வை அர்ப்பணித்தவரின் மனைவியாக இருந்தார்கள். நான் கூறியதுபோன்று அன்னாரின் நிக்காஹ்வை மவ்லானா ஜலாலுத்தீன் ஷம்ஸ் ஸாஹிப் அவர்கள் நடத்தினார்கள். மேலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் துஆ செய்து வைத்தார்கள். இந்த சம்பவம் தொடர்பாகவும் தந்தையார் அவர்கள் கூறியுள்ளார்கள். அன்னாருடைய தந்தையார் அதாவது தாஹிரா ஸாஹிபாவின் கணவர் கூறியுள்ளார்கள்; கணவருக்கு வேறு எங்கோ நிக்காஹ் நடைபெற இருந்தது. அனைத்து ஏற்பாடுகளும் முழுமையடைந்து இருந்தன. மவ்லானா அபுல் அதா ஜலந்தரி ஸாஹிப் அவர்கள் ரப்வாவில் மஸ்ஜித் நுஸ்ரத்தில் நிக்காஹ் நடத்த வேண்டி இருந்தது. அனைவரும் வந்திருந்தார்கள். மவ்லவி அபுல் அதா ஸாஹிப் ஜலந்தரி ஸாஹிப் அனைவரின் நிக்காஹ்வையும் நடத்தினார்கள்; ஆனால், இவர்களுடைய நிக்காஹ்வை நடத்தவில்லை. நீங்கள் வாழ்வை அர்ப்பணித்தவர் ஆவீர்கள்; எனவே உங்களுடைய நிக்காஹ்வை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் நடத்துவார்கள் என்று கூறினார்கள் அல்லது அன்னாரின் முன்னிலையில் நிக்காஹ் நடக்கும் என்று கூறினார்கள்.

எவ்வாறு இருப்பினும் சிறிது காலத்திற்கு பிறகு எங்கு நிக்காஹ் நடக்கவிருந்ததோ, பேசி வைக்கப்பட்டிருந்ததோ அங்கு மறுத்துவிட்டார்கள். அதாவது பெண் வீட்டார் தரப்பிலிருந்து மறுக்கப்பட்டது. பிறகு அவர்களின் நிக்காஹ் தாஹிரா ஸாஹிபாவுடன் நடைபெற்றது.மேலும் இந்த திருமணம் மிகவும் அருளுக்குரியதாக இருந்தது.

சந்தாக்களை முறையாக செலுத்தக் கூடியவர்களாக இருந்தார்கள்.

கனடாவின் செகரட்டரி மால் அவர்கள் எழுதியுள்ளார்கள். அவர்களிடத்தில் கூறியுள்ளார்கள். நான் கனவில் கண்டேன். நான் ரிஜிஸ்டரை திறந்து சந்தாவின் கணக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்; அப்பொழுது தாஹிரா ரஷீதுத்தீன் ஸாஹிப் அருகில் வந்து அமர்ந்து விடுகின்றார்கள். நான் கூறுகின்றேன்: இப்பொழுது தஹ்ரீகே ஜதீத் சந்தாவில் ஐந்தாயிரம் டாலர்கள் செலுத்தினால் உங்களுடைய பெயரும் ஐந்தாயிரம் டாலர்கள் செலுத்தும் நபர்களின் பெயர்களுடன் இணைந்து விடும். அந்தக் கனவில் ஒப்புக் கொண்டதாக வெளிப்படுத்தினார்கள். அப்பொழுது அன்னார் பாகிஸ்தான் சென்றிருந்தார்கள். பாகிஸ்தானில் இருந்து திரும்பி வந்ததும், அவர்களிடத்தில் நான் கனவைக் கூறியதும் அன்னார் உடனடியாக ஐந்தாயிரம் டாலர் கொடுத்து விட்டார்கள். அன்னார் இவ்வாறுதான் செய்வார்கள் என்ற நம்பிக்கையும் இருந்தது; தற்போது அல்லாஹ் அன்னாருக்கு பொருளாதாரத்தில் பரக்கத்தும் செய்திருந்தான்.

அல்லாஹ் அன்னாருடன் கருணை மற்றும் பாவமன்னிப்புடன் நடந்து கொள்வானாக. அவர்களின் பிள்ளைகளுக்கும் அன்னாரின் நன்மைகளை தொடர்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

* * * * * * *

## குத்பா பேருரை 5.1.24 12-ம் பக்கத் தொடர்ச்சி..

வீணாகியிருக்கலாம்.

கனடாவின் ஒரு லஜ்னா உறுப்பினர் கூறுகின்றார்; ஜனவரியின் முதல் வாரத்தில் நான் வக்ஃபே ஜதீதின் புத்தாண்டிற்கான அறிவிப்பை செய்தபோது, தனக்கும் தன்னுடைய பிள்ளைகளுக்கும் சந்தா கொடுக்க வேண்டும் என்ற ஆசை இருவருக்கும் ஏற்பட்டது. வங்கியின் நிலையைப் பார்த்போது அங்கோ எதுவும் இருக்கவில்லை. எவ்வாறு இருப்பினும், இவர் கூறுகிறார்: நான் சந்தா செலுத்தும் விதத்திலான ஏற்பாட்டை எல்லாம் வல்ல அல்லாஹ் மறைவிலிருந்து எனக்கும் செய்து விட வேண்டும் என்று துஆ செய்தேன். பிறகு சில நாட்கள் கழித்து வங்கிக் கணக்கில் பார்த்தபோது அதில் 300 டாலருக்கு நிகரான தொகை இருந்தது. மேலும், நான் எனக்கும் என் மர்ஹூம் மகளுக்காகவும் சந்தாவில் கொடுக்க விரும்பிய அளவு தொகையே இருந்தது. நான் உடனடியாக அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவித்தவாறு சந்தாவில் செலுத்தி விட்டேன்.

பிறகு, கனடாவின் இன்னொரு நண்பர் இருக்கிறார்: இவரும் பெண்மணி ஆவார். இவர் தம்முடைய வாக்குறுதியை அதிகரித்து முழுமையாக செலுத்தி விட்டார். அடுத்த நாளே இவருக்கு வரித் துறையிலிருந்து வருவாய்த் துறையிலிருந்து கூடுதல் தொகைக்கான காசோலை திரும்பி வந்து விட்டது. அது 750 டாலர் பணமாகும். இவர் கூறுகிறார்: இது நான் செலுத்தியிருந்த அந்தப் பணமே ஆகும்.

தன்ஸானியாவிலிருந்து புதிதாக பைஅத் செய்த ஒரு பெண்மணி ஆமினா ஸாஹிபா ஆவார். இவர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். இவர் கூறுகின்றார்: நான் அஹ்மதிய்யத்தில் ஒரு தனி அமைப்பைக் கண்டேன். அது மற்ற முஸ்லிம்களை விட்டும் வேறுபட்டிருந்தது. நிதியமைப்பில் ஒவ்வொரு சந்தாவுக்கும் ரஸீது வழங்கப்படுகிறது. வேறு எந்த இடத்திலும் வழங்கப்படுவதில்லை. இவர் கூறுகின்றார்:

நவம்பர் மாதத்தில் முஅல்லிம் ஸாஹிப் அவர்கள் ஜுமுஆ பேருரை வழங்கினார்கள். வக்ஃபே ஜதீத் பற்றி எடுத்துக் கூறினார்கள். என்னிடம் எவ்வளவு பணம் இருந்ததோ மொத்தத்தையும் நான் சந்தாவில் கொடுத்து விட்டேன். எனது வீட்டின் நிலைமை சிறந்ததாக இருக்கவில்லை. மகள் கர்ப்பிணியாக இருந்தார். மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய தேவை ஏற்படலாம் என்றிருந்தது. வீடு வந்ததடைந்ததும் இரவு இஷாவுக்குப் பிறகு எனக்கு ஒருவருடைய ஃபோன் வந்தது. அவர் இரண்டு வருடங்களாக என்னிடம் சிறிது தொகையைக் கடன் வாங்கியிருந்தார். மேலும், தொடர்பு கொள்ளவே இல்லை. இப்பொழுது இந்தப் பணம் திரும்பி வராது என்று நான் மறந்து விட்டிருந்தேன்.

எவ்வாறு இருப்பினும், அவர் ஃபோன் செய்தார். மன்னிப்பு கேட்டார். மேலும், காரணங்களைக் கூறி இரண்டாயிரத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டார். ஆக, நான் என்னுடைய தேவைகளை முதுக்குப் பின் எறிந்து விட்டு இந்தப் பொருள் தியாகத்தை செய்ததனால் எல்லாம் வல்ல அல்லாஹ் எனக்கு அந்த உதவியைச் செய்தான்.

மேலும், அங்கு அதற்குப் பிறகு இவர்களுக்கு உடனடியாக மகளையும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் புரிந்தான். இவ்வாறு மகளுக்கு சிகிச்சையும் அளிக்கப்பட்டு விட்டது.

எல்லாம் வல்ல அல்லாஹ் புதிதாக வரக் கூடியவர்களிடமும், செல்வம் அல்லாஹ்வின் புறமிருந்து வருகிறது என்ற இந்த சிந்தனையை உருவாக்குகின்றான். மேலும், இந்த சிந்தனை ஓர் அஹ்மதியிடம் மட்டுமே காணப்படுகின்றது.

மற்றொரு நாடு நைஜீரியாவாகும். இன்றைய நாட்களில் அங்கு நிலைமைகளும் மிகவும் மோசமாக உள்ளன. அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் முராதீ மண்டலத்தின் ஒரு கிராமத்திற்குச் சுற்றுப் பயணம் சென்றோம். இதை முஅல்லிம் ஸாஹிப் கூறுகின்றார்: சந்தா வழங்குமாறு எடுத்துக் கூறினோம். மக்கள் தங்களால் இயன்ற அளவுக்கு வக்ஃபே ஜதீத் சந்தாவில் பங்கெடுத்தார்கள். அங்கிருந்த கிராமத்தின் அஹ்மதி அல்லாத ஒருவர் கூறினார்:

நீங்கள் எங்களுடைய கிராமத்தின் ஏழை மக்களிடம் தொகையை வசூல் செய்கிறீர்கள். ஆனால், உங்களுக்கோ நாட்டின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமாக உள்ளது என்பது மிக நன்றாகத் தெரியும். மற்ற இஸ்லாமிய அமைப்புகளோ மக்களுக்காக ஏதாவது கொண்டு வருகின்றார்கள். ஆனால், நீங்களோ அவர்களிடம் கேட்கிறீர்களே!

முஅல்லிம் ஸாஹிப் கூறுகிறார்கள்: நான் ஒரு பதில் கூறுவதற்கு முன்னதாக அந்த கிராமத்தின் ஓர் அஹ்மதி எழுந்து விட்டார். அவர் மிகவும் உத்வேகத்துடன் இவ்வாறு கூறினார்: சரிதான்! மற்ற இஸ்லாமிய ஜமாஅத்துகள் வருகின்றனதான். ஏதாவது நிவாரண உதவி செய்து விடுவார்களாக இருக்கலாம். ஆனால், ஏதாவது ஓர் இஸ்லாமிய அமைப்பு நமக்கு இஸ்லாத்தைப் பற்றி ஏதாவது கற்றுக் கொடுத்திருக்கிறதா? அவர்கள் நிவாரணப் பணியையோ செய்து விட்டு சென்றிருக்கலாம். ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத் நமக்கு மார்க்கத்தைக் கற்றுக் கொடுக்கிறது. மேலும், இங்கு முஅல்லிம் ஸாஹிப் நம்மிடமிருந்து தொகையை வசூலிப்பதற்காக வரவில்லை. மாறாக, ஹுஸூர் (ஸல்) அவர்களின் காலத்தில் ஸஹாபா (ரலியல்லாஹு அன்ஹும்) முன் வைத்த பொருள் தியாகத்தின் அந்த உணர்வை நமக்கு வலியுறுத்துவதற்காக வந்துள்ளார்கள்.(தொடரும்..........)

தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ

இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்...

திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் இரவு நேரத்தில்
குறைவாகவே
துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

# ஜுமுஆ பேருரை

**வக்ஃபே ஜதீத் திட்டத்தின் 66-ம் ஆண்டில் ஜமாஅத் உறுப்பினர்கள் சார்பாக முன் வைக்கப்பட்ட பொருள் தியாகங்களைப் பற்றிய நற்குறிப்புகள் மற்றும் 67-ம் ஆண்டின் துவக்கத்திற்கான அறிவிப்பு**

**வக்ஃபே ஜதீதின் 66-ம் ஆண்டில் உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு ஒரு கோடியே இருபத்தி ஒன்பது இலட்சத்து நாற்பத்தி ஓராயிரம் பவுண்ட்கள் பொருள் தியாகம் செய்வதற்கு நற்பேறு கிடைத்தது. இது கடந்த ஆண்டின் வசூலை விட ஏழு லட்சத்து பதினெட்டாயிரம் பவுண்ட்கள் கூடுதல் ஆகும்**

---

**இஸ்லாத்தின் போதனைகளை பரப்புவதற்காக எழுதுகோல் மூலமான ஜிஹாதும் தப்லீஃக் ஜிஹாதும் நடைபெற்று வருகின்றது. இந்த ஜிஹாதை தொடரச் செய்வதற்காக இஸ்லாத்தின் துவக்கத்தில் தியாகங்களுக்கான அவசியம் இருந்ததைப் போன்று உயிர் செல்வம் நேரம் கண்ணியம் போன்றவற்றின் தியாகத்திற்காக அவசியம் உள்ளது**

**மார்க்கத்தை பரப்புவதற்காக செய்யப்படும் தியாகங்கள் அல்லாஹ்வின் நெருக்கத்தப் பெறுவதற்கான வழிமுறையும் வெற்றிகரமான வாணிபமும் ஆகும்**

**இன்றைய நாட்களில் அஹ்மதிகள் மட்டுமே மார்க்கத்திற்காக பொருள் தியாகம் செய்வதன் முக்கியத்துவத்தை புரிந்துள்ளனர். அவர்கள் பனித்துளிகளைப் போன்று சிறு, சிறு தொகைகளை வழங்கினாலும் அல்லாஹ் அவர்களுக்கு எல்லையற்ற கனிகளை வழங்குகினறான்**

---

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 05 ஜனவரி 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **ஸுல்ஹ்** மாதம் **05ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி.....**

நான் கூறியது போன்று தூய மக்களின் சில முன்னுதாரணங்களை முன் வைக்கின்றேன்.

மத்திய ஆஃப்ரிக்க குடியரசில் குதம்பாலா என்ற ஓர் இடம் உள்ளது. அங்கு ஈஸா ஸாஹிப் எனும் புதிதாக பைஅத் செய்த ஒருவர் இருக்கிறார். அவர் கூறுகின்றார்: நான் ஒன்பது மாதங்களுக்கு முன்பு பைஅத் செய்திருந்தேன். 2016-இல் இருந்து என்னிடம் ஒரு பிளாட் இருந்தது. அதை நான் வீடு கட்டுவதற்காக வாங்கியிருந்தேன். ஆனால், வீடு கட்டும் அளவுக்குப் பணம் சேராமல் இருந்தது. ஜமாஅத்தில் இணைந்தேன். சந்தாவின் முக்கியத்துவம் மற்றும் அருட்கள் பற்றி கேட்டுக் கொண்டே இருந்தேன். இறைவழியில் சிறிதளவு என்ன தியாகம் செய்ய முடிந்ததோ அதை செய்து வந்தேன்.எல்லாம் வல்ல அல்லாஹ் அதனால் பணியை எளிதாக்குகின்றான்; செல்வங்கள் மற்றும் ஆன்மாக்களில் முன்னேறத்தையும் வழங்குகின்றான் என்பதையே கேட்டு வந்தேன். ஆக, எவ்வாறு இருப்பினும் அவர் கூறுகின்றார்:

நாங்கள் அஹ்மதி அல்லாதவர்களாக இருந்தபோது நாங்கள் ஒருமுறை கூட இறைவழியில் சந்தா கொடுக்கவில்லை ; இதைப் பற்றி எங்களுக்கு யாரும் எடுத்துக் கூறியதுமில்லை ; இப்பொழுது எடுத்துக் கூறப்பட்டுள்ளது என்ற சிந்தனை என் மனதில் வந்தது.

புதிதாக பைஅத் செய்தவர்களிடம் பொதுவாக தஹ்ரீகே ஜதீத் சந்தா மற்றும் வக்ஃபே ஜதீத் சந்தா பற்றி கூறப்படுகிறது.

அவர் கூறுகின்றார்: எனக்குக் கூறப்பட்டது. நான் வக்ஃபே ஜதீதில் 1500 ஸீஃபா செலுத்தி விட்டேன். எல்லாம் வல்ல இறைவன் அதற்கான வெகுமதியை எப்படி வழங்கினான் என்றால், நண்பர் ஒருவர் வீடு கட்டுவதற்காக 10,000 செங்கல்களை செய்து தருவதாக முன் வந்தார். பிறகு, செங்கல்களை செய்தும் கொடுத்து விட்டார்.

அங்கு சுயமே தயாரிக்கப்படுகிறது. சிமெண்டை வைத்து Block- கள் உருவாக்குவார்கள்.

இவ்வாறு வீட்டின் கட்டுமானப் பணி துவங்கி விட்டது. அதற்காகப் பல ஆண்டுகள் காத்திருக்கப்பட்டது. வீடு முழுமையும் அடைந்து விட்டது.

பிறகு இவர் கூறுகின்றார்: இது அல்லாஹ்வின் அருளால் நிகழ்ந்தது என்று எனக்கு உறுதியான நம்பிக்கை உள்ளது. இல்லையென்றால், எனக்குள்ளோ இந்த ஆற்றல் இருக்கவில்லை. எனக்கு அது அசாத்தியமானதாக இருந்தது.

கஸாகிஸ்தான் முன்னாள் ரஷ்ய நாட்டின் ஒரு மாநிலமாகும். அங்குள்ள தவ்ரைன் ஸாஹிப் என்ற ஒரு நண்பர் கூறுகின்றார்: சில நாட்களுக்கு முன் எனக்கு முஅல்லிம் ஸாஹிப் அவர்களின் இந்தத் தகவல் கிடைத்தது; இந்த ஆண்டு உங்களுடைய மனைவியின் வக்ஃபே ஜதீத் சந்தா மிகவும் குறைவாக உள்ளது. பட்டியலில் கடைசியில் உள்ளது. முடிந்தால் குறைந்தபட்சம் 5000 தொங்கே செலுத்தி விடுங்கள்.

இப்பொழுது என் மனைவி கருவுற்றிருக்கின்றார். அவருக்கு அறுவை சிகிச்சையும் நடக்கப் போகின்றது. நான் 15,000 தொங்கே செலுத்துவதுதான் சிறந்தது என்று நான் நினைத்தேன். நான் பணம் அனுப்பியதுமே சுமார் 20 நிமிடத்திற்குப் பிறகு எனக்கு பள்ளிக் கூடம் தரப்பிலிருந்து தகவல் கிடைத்தது. அதாவது நான் ஓர் அநாதையைப் பராமரிக்கவும் செய்கின்றேன். எனக்குப் பிள்ளைகளும் அதிகம். எனவே அங்குள்ள அரசாங்கம் எனக்கு ஒரு லட்சம் தொங்கே கொடுப்பதாக தீர்மானித்தது. இவ்வாறு எல்லாம் வல்ல அல்லாஹ் உடனடியாக எனக்குத் திருப்பிக் கொடுத்து விட்டான். எனக்கோ ஈமான் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்தது.

பிறகு, கீர்கீஸ்தான் என்ற இன்னொரு மாநிலம் உள்ளது. அங்குள்ள ஒரு நண்பர் ஹூர்மத் ஸாஹிப் ஆவார்.கோல்ட் மாயினில் பணி புரிகின்றார்.(ஒவ்வொரு) ஆறு மாதங்களுக்குப் பிறகு(ம்) சந்தா செலுத்தி வருவார். கடந்த ஆண்டு இவர் இரண்டாவது ஆறு மாதங்களுக்கான சந்தாவை செலுத்தியபோது, பட்ஜெட்டை விட அதிகமாக அவர்களுடைய கரன்சி 6000 கிர்கீஸ் ஸூம் செலுத்தி விட்டார். அதைப் பற்றி கேட்டபோது கூறினார்:

முழு உலகிலும் விலைவாசி ஏறியுள்ளது. அதன் காரணமாக ஜமாஅத்தின் செலவுகளும் அதிகரித்திருக்கும். எனவே நான் பட்ஜெட்டை விட அதிகமாக எனது சந்தாவை செலுத்துகின்றேன். இவ்வாண்டும் அவர் முதல் ஆறு மாதங்களுக்கான சந்தாவை செலுத்தியபோது மேற்கொண்டு 6000 ஸூம் அதிகரித்து சந்தா செலுத்தி விட்டார். இவ்வாறு அவர் ஏறத்தாழ 40 சதவிகிதத்திற்கும் அதிகமாக சந்தா செலுத்தி விட்டார். இப்பொழுது இது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் விருப்பம் மற்றும் அவனது திருப்தியைப் பெற விரும்புவதற்கான உதாரணமாகும். யாரும் அவருக்கு வலியுறுத்தவில்லை. ஆனால், தேவைகளை முன்னிறுத்தி நான் அதிகதிகமாக கொடுக்க வேண்டும் என்று சுயமே அவர் முயற்சி செய்தார். ஏன் கேட்கின்றீர்கள்? என்று மக்கள் கூறுகிறார்கள். நாங்கள் கேட்பதில்லை. நாங்களோ அல்லாஹ்வின் வழியில் தியாகங்கள் செய்யுங்கள் என்ற எல்லாம் வல்ல அல்லாஹ்வின் தூதுச் செய்தியை மற்றவர்களுக்கு எட்ட வைக்கின்றோம்.

ஃபிலிப்பைன் இன்னொரு நாடு, தொலை தூரப் பகுதியாகும். அங்குள்ள முபல்லிஃக் கூறுகின்றார்கள்: குத்தாமுல் அஹ்மதிய்யாவின் ஸத்ர் கூறுகின்றார்கள்: நான் வாக்குறுதிக்கு ஏற்ப வக்ஃபே ஜதீத் சந்தாவையோ செலுத்தி விட்டிருந்தேன். ஆனால், நிதியாண்டு முடிவடைந்து கொண்டிருந்தது. வாக்குறுதியை விட அதிகமாக செலுத்த வேண்டும் என்ற ஆசை உள்ளத்தில் வந்தது. எனவே நான் என் தந்தை மர்ஹூம், தாயார் மற்றும் மாமனார் பெயரிலும் ஆயிரம் பிர்ஸோ வக்ஃபே ஜதீத் சந்தாவாக செலுத்தி விட்டேன். அந்த நாள்களில் நான் உள்ளூர் நகராட்சி அலுவலகத்தில் இடர் குறைப்பு மேலாளராக ஒப்பந்தத்தின் கீழ் வேலை செய்து கொண்டிருந்தேன்.

புத்தாண்டின் விடுமுறைகளுக்குப் பிறகு நான் வேலைக்கு சென்றதுமே உள்ளூர் மேயர் எனது வேலையை நிரந்தரமாக்கி விட்டார். எனது சம்பளத்தையும் இரட்டிப்பாக்கி விட்டார். ஆனால், நானோ கடந்த நான்கு ஆண்டுகளாக ஒப்பந்தத்திற்கு வேலை செய்து கொண்டிருந்தேன். மீண்டும் மீண்டும் விண்ணப்பம் கொடுத்தும் எனது வேலை நிரந்தரமாக ஆகவில்லை. அவர் கூறுகின்றார்: இப்பொழுது நான் செய்த தியாகத்திற்கான

கனிதான் இது என்றே நான் உறுதியாக நம்புகிறேன். நிச்சயமாக எல்லாம் வல்ல இறைவன் நமது கற்பனைக்கும் அப்பாற்பட்டு கொடுக்கக் கூடியவன் ஆவான்.

கேம்ரூன் ஆஃப்ரிக்காவின் ஒரு நாடாகும். அங்குள்ள முரப்பி கூறுகின்றார்கள்: யூஸுஃப் ஸாஹிப் என்ற ஓர் இளைஞர் அஹ்மதியத்தை ஏற்றுக் கொண்டார். ஏழை அஹ்மதி ஆவார். மோட்டார் சைக்கிளில் சவாரிகளை ஏற்றிச் செல்வார்.

முஹம்மது யூசுஃப் கூறுகின்றார்: நான் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டதில் இருந்து, முரப்பி ஸாஹிப் அவர்கள் கூறியதற்கு ஏற்ப சிறிதளவு சந்தா கொடுக்கத் துவங்கியதிலிருந்து என்னுடைய நிலைமைகள் மாற ஆரம்பித்து விட்டன. எனது உள்ளம் மிகவும் நிறைவடைந்துள்ளது. எனது வாழ்வில் விஷயங்கள் எளிமையாகி விட்டன. அசல் விஷயம் மன நிறைவாகும்.

அவர் கூறுகிறார்: சந்தா கொடுத்ததினால் எனது உள்ளமும் நிறைவாக உள்ளது. இப்பொழுது நான் இனி வக்ஃபே ஜதீத் மட்டும் அல்லாமல், அதையும் தாண்டி எல்லாக் கட்டாயச் சந்தாக்களிலும் பங்கு பெறுவேன் என்று உறுதி எடுத்துள்ளேன். ஏனெனில், இதில் எனக்கும் எனது குடும்பத்திற்கும் பரக்கத் உள்ளது. எனக்கு ஆன்மிக நிம்மதி கிடைத்திருப்பது இமாம் மஹ்தி (அலை) அவர்களின் பரக்கத் ஆகும். நான் மிகவும் மகிழ்ச்சியும், மனநிறைவும் அடைந்துள்ளேன். இவ்வாறு எல்லாம் வல்ல அல்லாஹ் உதவியாளர்களைப் பிறக்கச் செய்கின்றான்.

கிழக்கு ஆஃப்ரிக்காவின் ஒரு நாடு தன்ஸானியாவாகும். ரூமூமா மண்டலத்தில் ஓர் இளைஞர் மிலோவே ஸாஹிப் கூறுகின்றார்: எனக்கு 27 வயதாகின்றது. நான் சந்தாவின் பரக்கத்துகள் பலவற்றைக் கண்டுள்ளேன். விவசாயம் செய்கிறேன். அவர் கூறுகின்றார்: இவ்வாண்டு என்னுடைய வக்ஃபே ஜதீத் சந்தாவை செலுத்த வேண்டும் என்ற நிய்யத்தில் நான் என்னுடைய விளைச்சலை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு விரைவாக ஒப்படைத்து விட்டேன்.

விளைந்த பயிரை அரசாங்கத்திற்கு அனுப்பி விட்டார். அவர் கூறுகின்றார்:

நான் இன்னும் சிறிது நாட்கள் காத்திருந்தேன் என்றால் எனது பயிர்களுக்கு அதிகம் தொகை கிடைத்திருப்பதற்கான சாத்தியம் இருந்தது. ஆனால், நான் சந்தா செலுத்தியிருக்க முடியாது. நேரம் கடந்து விட்டிருக்கும்.

அவர் கூறுகின்றார்: நான் நிறுவனத்தை அணுகியபோது, அந்த நாட்களில் விவசாயிகளுக்குப் பயிர்களுக்காகக் கிடைத்துக் கொண்டிருந்த விலையை விட அதிக விலை எனக்குக் கிடைத்து விட்டது. அதை வைத்து நான் வக்ஃபே ஜதீத் சந்தாவை செலுத்தி விட்டேன்.

அந்த நிறுவனம் கூறியது: தங்களுக்கு அதிக விலை கிடைப்பதற்காகத் தங்களுடைய பயிர்களை மக்கள் நிறுத்தி வைக்கின்றார்கள். உங்களுடைய நேர்மைக்கான சன்மானம் கிடைத்துள்ளது. அவர் கூறுகின்றார்: நான் அல்லாஹ்வின் வழியில் சுலபமாக தியாகம் செய்யும் பொருட்டு எல்லாம் வல்ல அல்லாஹ் எனது நிய்யத்திற்கான கனியைத் தந்ததாக நான் கருதுகிறேன். கிர்கீஸ்தானில் இருந்து ரோஸாமத் ஸாஹிப் என்ற ஒரு நண்பர் வக்ஃபே ஜதீத் சந்தாவைப் பற்றியே கூறுகின்றார்: இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இத்துடன் எனக்கு ஏற்பட்ட அறிமுகமும் மிகவும் சுவாரஸ்யமானது. எனக்கு நினைவிருக்கின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றி எனக்கு அறிமுகமானபோது, நான் முபல்லிஃக்கிடம் ஜமாஅத்தின் மொத்த செலவுகளையும் ஏற்றுக் கொள்வது யார்? என்று கேட்டேன்.

அவர் எனக்கு, ஜமாஅத்தின் பணிகள் என்னென்ன; கிலாஃபத் அமைப்பு உள்ளது; பிறகு பல்வேறு திட்டங்கள் உள்ளன ; வக்ஃபே ஜதீத் மற்றும் பிற பொருள் தியாகங்கள் உள்ளன என்று விளக்கத்தை கூறினார். அவற்றைப் பற்றி கூறினார். அவர் கூறுகின்றார்: அதற்கு முன் நான் இதுபோன்ற நிதியமைப்பைப் பற்றி ஒருபோதும் கண்டதுமில்லை ; கேள்விப்பட்டதுமில்லை. நான் முதன் முறையாக அமைப்பின் இந்த விஷயங்களைக் கேள்விப்பட்டேன்.

பிறகு, நான் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் காலகட்டத்தில் பைஅத் செய்த பிறகு ஒவ்வொரு மாதமும் சந்தா கொடுக்கத் துவங்கி விட்டேன். வாழ்நாள் முழுவதும் சந்தாவின் அளவற்ற பரக்கத்துகளைக் கண்டேன். ஜமாஅத்தில் இணைவதற்கு முன்னர் நான் என் குடும்பத்துடன் வாடகை வீட்டில் வாழ்ந்து வந்தேன். நாங்கள் மிகவும் சிரமப்பட்டு வாழ்வைக் கழித்து வந்தோம்.பல்வேறு இடங்களில் பணி புரிந்தேன். ஆதரவற்ற நிலைமை இருந்தது. சொத்தும் இருக்கவில்லை. நிரந்தர வருமானமும் இருக்கவில்லை. இப்பொழுது சந்தாவின் பரக்கத்தால் நான் ஒரு முழு வீட்டைக் கட்டி விட்டேன். அல்ஹம்துலில்லாஹ். இப்பொழுது எனது வாழ்வாதாரம் நிரந்தரமானதாகும். வேலையும் கஷ்டமானதல்ல. நல்ல சம்பளமும் உள்ளது. இவையனைத்தையும் சந்தாவின் காரணமாக எல்லாம் வல்ல அல்லாஹ் அருளியுள்ளான்.

டோகோ மேற்கு ஆஃப்ரிக்காவின் ஒரு நாடாகும். அங்குள்ள முபல்லிஃக் இன்சார்ஜ் கூறுகிறார்கள்: ஓர் அஹ்மதி பெண்மணியிடம் வக்ஃபே ஜதீத் சந்தாவுக்கான தொகை இருக்கவில்லை. அவர் தமது வீட்டின் பயன்பாட்டிற்காக காய்கறி விளைய வைத்திருந்தார். ஆக, அந்தக் காய்கறியை சந்தையில் விற்று இறைவனிடம் தாம் செய்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றினார். வக்ஃபே ஜதீத் சந்தா செலுத்தி விட்டார். மிகவும் சாதாரண பொருளாக இருந்தது. இவை ஸஹாபா பெருமக்கள் சந்தைக்குப் போய் வேலை செய்து வந்த அல்லது ஹாஃபிஸ் ஸாஹிப் அவர்கள் தமக்குக் கிடைக்கும் அன்பளிப்பு எதுவாக இருந்தாலும் அதை செலுத்தி வந்த அதே உதாரணங்கள் ஆகும்.

இவ்வாறே ஹம்ஸா ஸாஹிப் என்ற ஓர் உறுப்பினரிடம் வக்ஃபே ஜதீத் சந்தா கொடுப்பதற்குப் பணம் இருக்கவில்லை. அவரிடம் கோழிகள் இருந்தன. ஒன்பது கோழிகளை விற்று சந்தா செலுத்தி விட்டார். ஆக, இந்த ஏழை மக்கள் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக தியாகம் செய்கிறார்கள். இந்த மக்களே பழைய சான்றோர்களின் நினைவையும் புதுப்பிக்கின்றார்கள்.

இந்தோனேஷியாவின் ஒரு நண்பர் ஈமான் ஹிதாயத் ஸாஹிப். அவர் கூறுகிறார்: நான் பிறப்பால் அஹ்மதி ஆவேன். முதலிலோ நான் ஓர் உறுப்பினர் என்ற வகையிலேயே சந்தா செலுத்தி வந்தேன். அஹ்மதியாக உள்ளேன். சந்தா கொடுக்க வேண்டும் என்ற ஒரு பழக்கம் ஏற்பட்டிருந்தது. தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீத் ஆகிய தியாகங்களில் பங்கு பெற்றதில்லை. இதனால் என் சகோதரர்கள் அனைவரும் இரு திட்டங்கள் குறித்தும் எனக்கு கவனமூட்டினார்கள்.

நாம் வெறும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினராக இருப்பதனால் மட்டும் சந்தா கொடுப்பதில்லை. அதையும் தாண்டி, நாங்கள் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்காகப் பொருள் தியாகத்தில் பங்கு பெறுகிறோம்.

அவர் கூறுகிறார்: எனக்குள்ளும் தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீதில் பங்கு பெறுவதற்கான ஆர்வம் உருவானது. நான் இரண்டு திட்டங்களிலும் பொருள் தியாகம் செய்ய ஆரம்பித்து விட்டேன். அவற்றில் பங்கு பெற்றதற்குப் பிறகு நான் எனது வாழ்வில் மிகப் பெரும் மாற்றத்தை உணர்ந்தேன். நான் என்னை அல்லாஹ்வுக்கு அருகில் இருப்பதாக உணர்கிறேன். எனக்கு ஜமாஅத் பொறுப்பும் கொடுக்கப்பட்டு விட்டது. இவ்வாறே, வாழ்வாதார விஷயத்திலும் எல்லாம் வல்ல அல்லாஹ் தனது அன்பை வெளிப்படுத்தினான். எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்கள் என் பக்கம் நடந்து வந்தால் நான் உங்கள் பக்கம் ஓடி வருவேன் என்ற எல்லாம் வல்ல அல்லாஹ்வின் இந்தக் கூற்றை நான் சந்தாவின் பரக்கத்தால் நிறைவேறக் கண்டேன்.

ஆஸ்திரேலியாவில் மெல்பர்னின் ஒரு நண்பர் தமது சம்பவத்தை எழுதுகிறார்: வக்ஃபே ஜதீன் நிதியாண்டு முடிவடைவதற்கு சில மாதங்கள் முன்பு, எவர்கள் எல்லாம் பொருளாதார ரீதியாக உறுதியாக இருக்கிறார்களோ அவர்கள் வக்ஃபே ஜதீதில் குறைந்தபட்ச 5000 டாலர்கள் செலுத்தவும் என்று வலியுறுத்தப்பட்டது. அவர் கூறுகிறார்: நான் வக்ஃபே ஜதீதுக்காக 4000 டாலர்கள் செலுத்தியிருந்தேன். என்னிடம் 5000 டாலர்கள் இருக்கவில்லை.

ஆனால், நான் வக்ஃபே ஜதீதுக்காக 5000 டாலர்கள் தியாகம் செய்ய வேண்டும் என்ற பெரும் ஆசை எனது உள்ளத்தில் பிறந்தது. எனவே ஜுமுஆவில் இருந்து திரும்பி வருகையில், நான் துஆ செய்ய ஆரம்பித்து விட்டேன். இப்பொழுது இவர் நல்ல நிலைமையில் இருந்தார். ஆனால், பிறகும் அல்லாஹ்வின் மீதான அச்சம் உள்ளத்தில் இருந்தது. இவருக்கு ஓர் ஈடுபாடு இருந்தது. ஆசை இருந்தது, துஆவின் பக்கம் எழுச்சி ஏற்பட்டது.

அவர் கூறுகிறார்: நான் துஆ செய்தேன். நான் தொழில் செய்கிறேன். ஒரு சிறு தொழில் ஆகும். ஒருநாள் நான் அலுவலகத்தில் சிறிது நேர இடைவேளைக்காக வெளியில் வந்தேன். நான் அந்தச் சந்தாவில் எவ்வாறு பங்களிப்பது? எல்லாம் வல்ல அல்லாஹ் எனக்கு நல்வாய்ப்பு வழங்க வேண்டும் என்று துஆவும் செய்து வந்தேன். அவர் கூறுகிறார்: நான் அலுவலகத்திற்குத் திரும்பி வந்தபோது கிறிஸ்தவரான என்னுடைய Business Partner எனது அலுவலகத்திற்கு வந்தார். மேலும், கதவை அடைத்து விட்டு மிகவும் மகிழ்ச்சியுடன் கைகுலுக்கினார். ஒரு பெரிய செய்தி இருக்கிறது என்று கூறினார். மேற்கொண்டு விளக்கமாகக் கூறியவாறு அவர் கூறினார்: ஒரு புது தொழிலுக்காக ஒரு வாடிக்கையாளர் செட்அப் அமைத்துத் தரச் சொல்லி விண்ணப்பித்திருக்கின்றார். மேலும், அதற்கான கட்டணம் 30,000 ஆகும். அதிலிருந்து நம் இருவருடைய பங்கிலும் 15,15 ஆயிரம் வரும்.

அவர் கூறுகின்றார்: எனது துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது என்று நான் உடனடியாகப் புரிந்து கொண்டேன். நான் என்ன துஆ செய்து கொண்டிருந்தேன்; எவ்வாறு எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்கு உதவினான்; மேலும், எல்லாம் வல்ல அல்லாஹ் நான் செய்த துஆவிற்குப் பதில் அளித்து விட்டான் என்று எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கின்றது என நான் என் Business Partner இடம் கூறினேன். இதைக் கேட்ட பாட்னரும் இவ்வாறு கூற ஆரம்பித்தார்: தொண்டு நிதிக்காக 5000 டாலர்கள் மிகவும் அதிகம் ஆகும்.

பிறகு, அவர் நீ செய்த பிரார்த்தனையின் காரணமாக எனக்கும் இந்தப் பலன் கிடைத்துள்ளது. எனவே நானும் எனது பங்கை அளிப்பேன். நீ செலுத்த

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 07 MARCH 2024 Issue No.10

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

வேண்டிய தொகையில் பாதியை நான் செலுத்துவேன் என்று கூறினார். ஆனால், நான் அவரிடம் இன்னும் பல தான தர்மங்கள் உள்ளன. அவற்றில் அவர் தனது பங்களிப்பை செலுத்தலாம் என்று கூறினேன். இந்த 5000 டாலர்களோ வக்ஃபே ஜதீதுக்கானவை. இதை நான் சுயமே செலுத்த வேண்டும். எவ்வாறு இருப்பினும், எல்லாம் வல்ல அல்லாஹ் எனது துஆ மற்றும் ஆசையை ஏற்றுக் கொண்டவாறு என் மீது பேரருள் புரிந்தான்.

அடுத்து ஃபிஜீ இதுவும் தொலைதூரப் பகுதியாகும். அங்கு ஸைனுல் பேக் ஸாஹிப் என்ற புதிதாக பைஅத் செய்தவர் இருக்கின்றார். அவர் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பைஅத் செய்தார். ஆரம்ப கட்டமாக அவரைத் திட்டங்களில் இணைக்கப்பட்டபோது, சாதாரண தொகைக்கான வாக்குறுதி இருந்தது. பிறகு, சில காலங்கள் கழித்து கட்டாயச் சந்தாவிலும் இணைக்கப்பட்டார். ஆனால், அந்த ஆண்டு நான் ஆற்றிய குத்பாக்களைக் கேட்டு அமைப்பின் முக்கியத்துவம் பற்றியும் அவருக்குத் தெரிய வந்தது. அவர் தாமே தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீதில் தமது வாக்குறுதிகளை அதிகரித்து விட்டார். பத்து மடங்கு அதிகரித்து விட்டார். செலுத்தவும் செய்து விட்டார்.

பிறகு, ஆம் சந்தா தொடர்பாக அவர் கூறினார். வாராந்திர வருமானத்திற்கு ஏற்ப ஆம் சந்தாவையும் 16-இல் ஒரு பகுதி என்ற விகிதாச்சாரத்திற்கு ஏற்ப செலுத்துவதாக வாக்குறுதி அளித்தார். மேலும், முறையாக ஒவ்வொரு வாரமும் வந்து தமது சம்பளத்தில் இருந்து எல்லாச் சந்தாக்களையும் செலுத்தி விட்டுச் செல்வார்.

இந்த புதிதாக பைஅத் செய்தவர் கூறுகிறார்: நான் சந்தாவை அதிகரித்ததிலிருந்து எனக்கு ஊழியத்தில் முன்னேற்றம் கிடைத்தது. மேலும் கூறுகின்றார்: ஜனவரி 2024 இல் இருந்து சம்பளம் இன்னும் அதிகரித்து விடும். இன்ஷா அல்லாஹ் அவர் கூறுகின்றார்: யாராவது சந்தாவின் பரக்கத்தை அறிய வேண்டும் என்றால், அவர் என்னிடம் கேட்கட்டும்.

மாயிக்ரோநேஷியாவின் முபல்லிஃக் சிஜ்ஜீல் ஸாஹிப் கூறுகின்றார்கள்: இங்கு சாயிமன் ஸாஹிப் என்ற ஒரு புதிதாக பைஅத் செய்தவர் இருக்கின்றார். அவருக்குப் பொருள் தியாகம் பற்றி கவனமூட்டப்பட்டது. இந்தச் சந்தாக்களை நாங்கள் அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்காக கொடுக்கின்றோம். இது வரி ஒன்றும் கிடையாது. எல்லாம் வல்ல இறைவன் இதை ஓர் அழகிய கடனாக ஆக்கியுள்ளான்.

இதனால் அவர் ஒவ்வொரு வாரமும் சந்தா கொடுக்க ஆரம்பித்து விட்டார். சிலகாலம் கழித்து இவர் கூறினார்:

முதலில் நான் தேவாலயத்திற்கு செல்லும்போது பணம் செலுத்தியபோது வாழ்வில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. ஆனால், நான் ஜமாஅத்திற்கு வந்து எல்லாம் வல்ல அல்லாஹ்வின் வழியில் பொருள் தியாகம் செய்யத் துவங்கியதில் இருந்து, எல்லாம் வல்ல அல்லாஹ் எத்தகைய வழிவகைகள் மூலமாக எனது தேவைகளை நிறைவேற்றி விடுகின்றான் என்றால் நான் வியப்படைந்து போகிறேன். சில வேளை பணம் தேவைப்படும். திடீரென்று யாராவது ஒருவர் வந்து விடுவார்; எப்பொழுதாவது உணவு குறைவாக இருந்தால் வீட்டில் அமர்ந்திருக்கும்போதே எல்லாம் வல்ல அல்லாஹ் யார் மூலமாவது தேவையை நிறைவேற்றி விடுவான். எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால் சாயிமன் ஸாஹிப் தமது சக்திக்கு மீறி பொருள் தியாகம் செய்கின்றார்.

தன்ஸானியாவின் அமீர் ஸாஹிப் கூறுகின்றார்: பஷீர் ஸாஹிப் எனும் ஒரு நண்பர் வக்ஃபே ஜதீதில் தனக்கும் தன் குடும்பத்தினருக்கும் 40,000 ஷில்லிங் சந்தா செலுத்தினார். அவருடைய மனைவி வீட்டு நிலைமை அவ்வளவு நன்றாக இல்லை. பிறகும் ஏன் இவ்வளவு பெரிய தொகையைச் சந்தாவில் கொடுத்து விட்டீர்கள்? என்று கேட்டார். அதற்கு அவர் கவலைப்படாதே! எல்லாம் வல்ல அல்லாஹ் தன் வழியில் பொருள் தியாகம் செய்பவர்களை ஒருபோதும் வீணடிப்பதில்லை. அவன் கண்டிப்பாக அதை அதிகரித்துத் திருப்பிக் கொடுப்பான் என்று பதில் அளித்தார்.

ஆக, சில நாட்களிலேயே அவருக்கு இரண்டு மூன்று வெவ்வேறு வழிவகைகள் மூலமாக எப்படிப்பட்ட வேலை கிடைத்து விட்டது என்றால், சந்தாவில் செலுத்திய தொகை திரும்பி வந்தது மட்டுமின்றி, அதையும் தாண்டி அதை விட அதிகமாக வருமானம் வந்தது. அவர் கூறுகின்றார்: எனக்கோ இதற்கு முன்னரும் புரிதல் இருந்தது. ஆனால், இப்பொழுது என் மனைவியும் தன் கண்களுக்கு முன்னால் சந்தாவின் அருட்களைப் பார்த்து விட்டார். அவருடைய ஈமானும் அதிகரித்து விட்டது.

ஜெர்மனியின் தேசிய மற்றும் வக்ஃபே ஜதீத் செயலர் கூறுகின்றார்: மாயின்ஸ் ஜமாஅத்தின் ஒரு மாணவர் அரசாங்க நிறுவனத்திற்கு உதவித் தொகைக்கான விண்ணப்பம் கொடுத்தார். படிப்புக்காக சிறிது தொகை தேவைப்பட்டது. மேலும், தனது செமஸ்டர் ஆரம்பமாகவிருக்கின்றது. தொகை குறைவாக இருக்கின்றது என்று கூறினார்.

மறுபுறம் வக்ஃபே ஜதீத் ஆண்டும் நிறைவடைந்து கொண்டிருந்தது. தனது மற்றும் தனது குடும்பத்தினரின் வாக்குறுதிகளை செலுத்த வேண்டியிருந்தது. ஆனால், எதற்காக விண்ணப்பம் கொடுத்திருந்தாரோ அங்கிருந்து உதவித் தொகை கிடைத்து விடும் என்று அவருக்கு நம்பிக்கை இருந்தது. அரசாங்க நிறுவனம் தரப்பிலிருந்து அங்கிருந்து மறுக்கப்பட்டு விட்டது. அவர் தம்மிடம் இருந்த தொகையைக் கொண்டு அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து சந்தா செலுத்தி விட்டார். இதற்கு பிறகு நல்ல மதிப்பெண்களுடன் செமிஸ்டரை முழுமை செய்தார். அவரை எல்லாம் வல்ல அல்லாஹ் வெற்றி பெறச் செய்தான். மேலும், சம்பந்தப்பட்ட நிறுவனம் தரப்பிலிருந்தும், முதலிலோ மறுக்கப்பட்டிருந்தது. திடீரென்று 4000 யூரோவுக்கு நிகரான ஒரு தொகை இவருடைய வங்கிக் கணக்கில் வந்து விட்டது.

அடுத்து அவர் கூறுகின்றார்: இது தியாகத்தின் காரணமாக ஆகும் என்பதே என்னுடைய ஈமான் ஆகும்.

இந்தியாவின் ஓரிடம் சாமத் வாடீ ஆகும். அங்குள்ள ஓர் அஹ்மதி ஸிராஜ் ஸாஹிப் ஆவார். அவர் கூறினார்: நான் பொருள் தியாகத்தின் அருட்களை என் கண்களால் கண்டேன். கோவிட் நோய் காரணமாக வக்ஃபே ஜதீதின் சந்தாக்கள் பாக்கி இருந்து விட்டன. இரண்டு, மூன்று ஆண்டுகளாக இவருடைய தோட்டத்தின் மரக்கட்டைகள் மழைத் தண்ணீரால் வீணாகிக் கொண்டிருந்தன. அதை வாங்கிக் கொள்வதாக வாக்குறுதி அளித்த வாடிக்கையாளர் முடிவான தொகையை செலுத்தாமல் இருந்தார். எவ்வாறு இருப்பினும், இவர் வாங்குபவரைத் தேடிக் கொண்டிருந்தார். யாரும் கிடைக்கவில்லை. இவர் கூறுகின்றார்: வக்ஃபே ஜதீத் இன்ஸ்பெக்டர் வந்தபோது, வக்ஃபே ஜதீத் சந்தாவைக் கேட்டபோது இவர் உடனடியாக 2000 ரூபாயை எடுத்து கொடுத்து விட்டார். இவர் கூறுகின்றார்:

எந்த வாடிக்கையாளர் விலை நிர்ணயித்த பிறகும் பொருளை வாங்காமல் இருந்தாரோ அவர் இரண்டு நாட்களுக்குள் திடீரென்று வந்து 20000 ரூபாயைக் கொடுத்து எல்லாப் பொருட்களையும் எடுத்துச் சென்று விட்டார். இவர் கூறுகின்றார்: எனது ஈமான் இதுவே ஆகும். அதாவது, சந்தாவின் அருளால் எல்லாம் வல்ல அல்லாஹ் இரண்டாயிரத்தை அதிகரித்து 20,000 ஆக எனக்குத் திருப்பிக் கொடுத்து விட்டான். இல்லையென்றால் எந்தப் பொருள் பல ஆண்டுகளாக வீணாகிக் கொண்டிருந்ததோ அது பின்னரும்

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்....

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad